மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5.00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
புடவை அகம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 01 புதன்கிழமை (15 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 99

# பேராசிரியர் துரைராசாவுக்கு மக்கள் உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 15

மறைந்த பேராசிரியர் துரைராசாவுக்கு குடா நாட்டு மக்கள் நேற்று உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

நேற்று அதிகாலை 12-40 மணி முதல் காலை 9-30 மணி வரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியரின் புகழுடல் வைக்கப்பட்டிருந்தபோது மக்கள் பெருந்திரளாக ஒன்று கூடி, சோகம் ததும்ப மறைந்த பேராசானுக்கு தமது இறுதி அஞ்சலியைச்செலுத்தினர்.

யாழ் பல்கலைக் கழகத்தின் நந்திக் கொடியால் போர்க்கப்பட்டு — அழகான பேழையில் — பேராசிரியரின் புகழுடல் நேற்றுக் காலை அரங்கில் வைக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்விமான்கள், பல்துறை சார்ந்த நிபுணர்கள், டாக்டர்கள், கலைஞர்கள், விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் மற்றும் போராளிகள், மத பீடங்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் விவசாயிகள், கூட்டுறவாளர்கள் தொழிலாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலதரப்பட்டவர்களும் நேற்றுக் காலை பேராசிரியரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.


ஒரு புறம் தேவார, திருவாசகங்கள் பக்தி பூர்வமாக இசைக்க — மறுபுறத்தில் மக்கள் நீண்ட வரிசையில் கூடி நின்று பேராசிரியருக்கு அஞ்சலி செலுத்தினர்.

பலாலி வீதி வழியாக யாழ். ஆஸ்பத்திரி வீதிச் சந்தி வரை முற்பகல் 11-00 மணிக்கு ஊர்வலம் வந்தடைந்தது. அங்கு பொ [illegible]

(9 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் உரிமைபெற்று வாழ வேண்டுமென

# தளரா உறுதியுடன் குரல் கொடுத்த மாமனிதர்!



மீளாத்துயிலில் பேராசிரியர் துரைராசா

## பேராசிரியர் துரைராசாவுக்கு தலைவர் பிரபா புகழஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 15

எமது மக்கள் உரிமைபெற்று வாழ வேண்டும்; தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் தகைமை பெற்று வாழ வேண்டும் என்பதில் பேராசிரியர் துரைராசா உறுதியாக நின்றார். அதற்காகக் குரல் எழுப்பவும் அவர் தயங்கவில்லை.

இப்படியான ஒரு மாமனிதரைப் பிரிந்து துயரக் கண்ணீர் வடித்து நிற்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் துரைராசாவின் மறைவுகுறித்து வெளியிட்ட இரங்கல் செய்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தலைவர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

நாம் நெஞ்சார நேசித்த ஒரு பண்பான மனிதர் எம்மை விட்டுப் போய்விட்டார் இந்த இனிய மனிதரை இழந்து, எமது தேசம் இன்று ஆறாத் துயரில் மூழ்கிப்போய்க் கிடக்கிறது.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஓர் அபூர்வமான மனிதர்; நெஞ்சில் தூய்மையும், நேர்மையும் கொண்டவர்; தன்னலமற்றவர்; பொது நலத்தையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். எளிமை அவரது அழகான மாண்பு, இந்த மண் எமக்குத் தந்த அறிவு ஜீவிகளில் அவர் அற்புதமானவர்; அனைவரது உள்ளங்களையும் கவர்ந்த கொண்ட உயரிய பண்பாளர்.

எது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித் துறைக்கு அவர் ஆற்றிய பணி

(9ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியரின் புகழுடல் இன்று வதிரியில் தீயுடன் சங்கமமாகும்

வடமராட்சி, ஜூன் 15

அமரர் பேராசிரியர் துரைராசாவின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு வதிரி ஆலங்கட்டை பொது மயானத்தில் நடைபெறும்.

அதனை ஒட்டி இன்று குடாநாடு முழுவதிலும் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படும்; கடைகள், சந்தைகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், அரச, தனியார் அலுவலகங்கள் எதுவும் இயங்கா.

வதிரியில் பேராசிரியரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது புகழுடலுக்கு பெருந்திரளானோர் சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

புகழுடலுக்கு அருகே பேராசிரியரின் மனைவியும் பிள்ளைகளும் அமர்ந்திருக்கின்றனர்.

சமயச் சடங்குகளை அடுத்து இன்று காலை 10 மணிக்கு புகழுடல் பேராசிரியரின் இல்லத்திலிருந்து இறுதி யாத்திரைக்குப் புறப்படும்.

புகழுடல் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியைச் சென்றடைந்ததும் அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் இடம் பெறும்

அதன் பின்னர் புகழுடல் ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீயுடன் சங்கமமாகும்

## இடைக்காடு, வளலாயில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

### தொடர்ச்சியாக ஹெலித் தாக்குதல்

வளலாய் பத்தமேனி, இடைக்காடு தம்பாலைப் பகுதிகளில் நேற்று மாலை 5 மணியளவில் இரு பொம்மர்கள் மாறி, மாறி குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

அச்சுவேலி, ஆவரங்கால் உள்ளடங்கிய பகுதிகளுக்கு மேலாக பொம்மர்கள் சாகசம் புரிந்தபடி குண்டுத் தாக்குதலை நடத்தின.

இதேவேளை — அச்சுவேலி, பத்தமேனி தம்பாலைப் பகுதிகளை நேற்று வட்டமிட்ட ஹெலி பல தடவைகள் தாக்குதலை நடத்தியது.

வீதியால் சென்று கொண்டிருந்த வாகனங்களை நோக்கியும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கியும் ஹெலி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

நண்பகல் 12-15 மணியளவில் ஆரம்பித்த ஹெலி தாக்குதல் 1-45 வரை தொடர்ந்தது பின்னர் பிற்பகல் 3-30 மணிக்கும் ஹெலித் தாக்குதல் நடைபெற்றது

நேற்று ஹெலி தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தியதால் மாணவர்கள் பதற்றமடைந்து வீடுகளுக்குச் சென்றனர் இதனால் பாடசாலைகள் நண்பகலுடன் செயலிழந்தன. அச்சுவேலிப் பகுதியில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது.

(ஒ-11-155-173-15)

## ராணுவ நடவடிக்கை குறித்து யாழ். மக்கள் மத்தியில் அச்சம்

### ஹமில்டனிடம் யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

யாழ். மாவட்டத்தில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட [illegible] கொழும்பு பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அடுத்து குடாநாட்டு மக்கள் மத்தியில் அச்ச உணர்வு [illegible] அரச அதிபர் திரு. கே. மாணிக்க வாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவிடம் தெரிவித்துள்ளார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் தேடுதல்

கொழும்பு, ஜூன் 15

காரைநகர்ப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

காரைநகரில் அடுத்தடுத்து நடந்த இரு கண்ணிவெடித் தாக்குதல்களைத் தொடர்ந்தே தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு கண்ணிவெடித் தாக்குதல்களிலும் படையினர் ஐவர் கொல்லப்பட்டனர் என்பதும் பலர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

[ஒ-162]

## காரை. சின்ன ஆலடியிலேயே 'எல்வ்' வாகனம் சிதறியது!

### கண்ணிவெடி குறித்து தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 15

காரைநகர் கடற்படைத் தளத்தினுள் உள்ள சின்ன ஆலடி என்ற இடத்தில் வைத்தே கடந்த ஞாயிறன்று விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியதாக "புலிகளின் குரல்" வானொலி நேற்று அறிவித்தது.

இந்த தாக்குதலில் கடற்படையினர் நால்வர் கொல்லப்பட்ட செய்தி ஏற்கனவே வெளியானது தெரிந்ததே.

கடந்த 6 ஆம் திகதி பண்டத்தரிப்பு பகுதியில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் லெப்டினன்ட் ஒப்பிலான், லெப்டினன்ட் அன்பழகன் ஆகியோர் வீரச்சாவடைந்தனர். அந்த சம்பவத்துக்கு பதிலடி நடவடிக்கையாகவே காரைநகர் கடற்படைத் தளத்துக்குள் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஞாயிறு இரவு 8.45 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கடற்படையினர் ரோந்து வந்த "எல்வ்" வாகனம் முற்றாகச் சேதமடைந்தது.

அவ்வேளை உதவிக்கு வர முயன்ற கடற்படையினரின் மற்றொரு அணி மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கும் பகுதியில் நடத்தப்பட்ட இந்த வெற்றிகரத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5)

## ஜனாதிபதித் தேர்தல் குமார் போட்டியிடுவார்?

கொழும்பு, ஜூன் 15

கொழும்பில் உள்ள தமிழ் நடவடிக்கைக்குழு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தைத் தமது வேட்பாளராக நிறுத்த உத்தியோகப் பற்றற்ற முறையில் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

முன்னர் இந்தக் குழு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தை 'தமது ஜனாதிபதி வேட்பாளராகத் தீர்மானித்திருந்தது.

ஆனால் அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து அவர் ஜனாதிபதி வேட்பாளராக வரவிரும்பவில்லை என்று குழு முடிவு செய்ததாக, திரு. பொன்னம்பலம் தெரிவித்தார்.

தம்மை வேட்பாளராக நியமித்தது பற்றி தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

(ஒ-எ)

## சாவகச்சேரியிலும் ஹெலி வேட்டு

சாவகச்சேரி, ஜூன் 15

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்றுமாலை 4 மணியளவில் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது;

மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடி பாதுகாப்புத் தேடிக் கொண்டனர். பஸ் நிலையத்தில் நின்ற வாகனங்களும் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

(ஒ-81)



புகழுடலுக்கு [illegible] அஞ்சலி

### தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பு:

## டி.பி. விடுத்த அழைப்பை நிராகரித்தார் கூரே!

கொழும்பு ஜூன் 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது மேல் மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார மற்றும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்கும்படி ஜனாதிபதி விஜேதுங்கா விடுத்த அழைப்பை அமைச்சர் சிரிசேன கூரே நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

"எனது கொழும்பு மத்திய தொகுதியில் தேர்தல் நடவடிக்கைகளை நான் பார்த்துக் கொள்கின்றேன். மாகாணம் முழுவதையும் என்னால் கவனிக்க முடியாது" — என்று அமைச்சர் கூரே ஜனாதிபதியிடம் கூறிவிட்டார் என்று சண்டே டைம்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

### அடுத்த தேர்தல் நிலைமை குறித்து

## அதிர்ச்சி அடைந்திருக்கும் ஐ.தே.க தலைமைப்பீடம்!

எதிர்வரும் தேர்தல்கள் குறித்து மக்களின் மனநிலையை அறிந்து கொள்ள தேர்தல் தொகுதிகளுக்கு அனுப்பப்பட்ட புலனாய்வுக் குழுக்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடத்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

மக்களில் பெரும்பாலானோர், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஐ.தே.கவுக்கு ஆதரவு குறைந்து காணப்படுவதாக இப்புலனாய்வுக் குழுக்கள் தங்களின் அறிக்கைகளில் தெரிவித்துள்ளன என்று சண்டே டைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது

ஜனாதிபதி வேட்பாளராக எதிரணி சார்பில் சந்திரிகா போட்டியிட்டால், எதிர்வரும் தேர்தலில் அவருக்கு சாதகமான சூழ் நிலையே இருக்கும் என்றும் ஆளும் கட்சித் தலைமைப் பீடத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது

தென்பகுதி வன்செயல்களின் போது கைதாகி, பின்னர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சுமார் 25 ஆயிரம் பேர் சந்திரிகாவின் தலைமையின் கீழான பொது மக்கள் ஐக்கிய முன்னணியை தீவிரமாக ஆதரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(ஒ எ)

### மீண்டும் பதவி கிடைக்கலாம் என்ற ஆசை;

## ஆளும் கட்சி எம்.பிகள் அடுத்தடுத்து ராஜினாமா!

பதவி விலகமாட்டேன் என்று அடம்பிடித்து வந்த ஐ.தே.க. தேசியப் பட்டியல் எம். பிக்களில் சிலர் அடுத்தடுத்து பதவி விலக முன்வந்ததன் காரணம், அடுத்த தேர்தலின் பின்னர் மீண்டும் தேசியப் பட்டியல் எம். பிக்களாக நியமிக்கப்படுவர் என்று உறுதிமொழி அளிக்கப்பட்டதே என்று இப்போது தெரியவந்துள்ளது.

பதவி விலக மறுப்புத் தெரிவித்துள்ளவர்களுக்கு மீண்டும் அவ்வாய்ப்பு அளிக்கப்படமாட்டாது என்று தலைமைப் பீடத்தினால் கூறப்பட்டுள்ளது.

அந்த உறுதி மொழி காரணமாகத்தான் முன்னர் பதவி விலக பின்னடித்தவர்கள் இப்போது பதவி விலக முன்வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பம்பரச் சக்கர நடவடிக்கை

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் 'பம்பரச்சக்கர' என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க கொழும்பில் தெரிவித்தார்;

(ஒ-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும்
இணையற்ற கல்விமானும் தன்னேரில்லாச்
சமூக சேவையாளருமான

## பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ மங்கையர் கழகம்,
பழைய மாணவர் சங்கம்.
யா / இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (சி/5703)

# கண்ணீர் அஞ்சலி



தன்னலம் மறந்து பொது நலம் நிறைந்து
மக்களுக்காக வாழ்ந்த மாபெரும் தொண்டன்
யாழ். பல்கலைக் கழகத்தில் மீன்பிடியியல்
புறநிலைப் படிப்பு அலகினை அமைத்தும்
மீன்பிடி கற்கை நெறிக்கு தனியான
ஒரு பீடத்தினையும் அமைக்கப் பாடுபட்ட
எம் பேராசான்
முன்னை நாள் துணைவேந்தர்

அமரர் பேராசிரியர்

## அ. துரைராசா

அவர்களுக்கு
எமது

## இதய அஞ்சலி

நீங்கா நினைவுடன்
சுப்பர்மடம் வாழ் மக்கள்
(31430)

## பல்கலைக் கழக மாணவருக்கு ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
முன்னாள் துணை வேந்தர் அமரர் துரைராசாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளும் அனைத்து பீட மாணவர்களையும் இன்று காலை 7.30 மணிக்கு பல்கலைக் கழகத்தில் கூடுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.
மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ)

## நாளை

தென்மராட்சி, ஜூன் 15
தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கோட்ட மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வியாழன் பி.ப.1.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (ஒ-117)

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரித் தமிழ்ப் பேரவை நடத்தும் தமிழ்விழா விவேகானந்த மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.
யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்
விழாவில் சிறப்புரைகள், நடனம், நாடகம், வில்லிசை, பல்குரல் ஒலி முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். (க)

## நாய்களுக்கு நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 15
யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருகிறது.
இன்று புதன்கிழமை தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் வருமாறு:-
★ காலை 8 மணி தொடக்கம் 10மணி வரை—வண்ணார் பண்ணை வடமேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம், நாச்சிமார் கோவிலடி காமாட்சி சனசமூக நிலையம்.
★ காலை 10 - 30 மணி தொடக்கம் பிற்பகல் 12 - 30 மணிவரை — வண். ஐயனார் கோவில் சனசமூக நிலையம், சிவலிங்கப்புளியடி ஒட்டுமடம் சனசமூக நிலையம்.
★ பிற்பகல் 2மணி தொடக்கம் 4 மணி வரை—நீராவியடி சனசமூக நிலையம், பிறவுண் வீதி பெரியதம்பிரான் கோவிலடி. (இ-17)

# OUR DEEPEST CONDOLENCE

of Passing away
LATE PROF.

## A. THURAIRAJAH

(Former Vice Chancellor, University of Jaffna)
DIRECTOR & STAFF.

## EAGLE SECURITY SERVICE

(JAFFNA, KILINOCHCHI & VAVUNIYA)

(Attached to Faculty of Agriculture (University of Jaffna) and Northern Provilnce Affiliated University College Vavuniya)

(31401)

# அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

## அமரர் அ. துரைராசா

அவர்களுக்கு
எமது இதய அஞ்சலி

இன்னல்கள் வந்தபோது தென்மராட்சி மக்களின் துயர் துடைக்க எம்முடன் தோள்நின்று உழைத்த எம் உத்தமனுக்கு எமது உளம் நெகிழ்ந்த அனுதாபங்கள்.

டாக்டர்.
எஸ் அருளானந்தம்
குடும்பத்தினர்
சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி/8509)

யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர்
பேராசிரியர்; பேரறிஞர்; கலாநிதி

## அ. துரைராசா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

உன்னதத்தால் உயர்ந்தவனே!
உலகத்தில் மிளிர்ந்தவனே!
கல்வியில் மேதையே
கணிப்புறு கனவானே!
உன் மறைவு கண்டு துயரமதில்
நீந்துகின்றோம்.

காமாட்சியம்பாள் இந்து பரிபாலனசபை
காமாட்சியம்பாள் சனசமூக நிலையம்
நீர்வேலி. (சி-8505)

# வாடிக் கதறும் மலர் மாலைகள்!

வதிரியப்பதியின் விரிசுடர் ஞாயிறாய் தமிழ் மண் தழைக்க வந்த தவப் புதல்வன் பேராசிரியர் துரைராசா எம்மிடை நெடிது வாழ கொடுத்து வைக்கவில்லை வையகம் பயனுற வாழ்ந்த பெருமை சேர்த்த வள்ளன்மையை உள்ளம் உள்ளவரை மறக்கற்கரியதே.

அகக்கண் ஒளிதர. ஆண்மை வலியுற திக்கெல்லாம் வென்று ஜெயக்கொடி நாட்டிய தீரன் இன்று மெய் பொய்யாகி நெய்யென உருகும் நெஞ்சினராய் தமிழ்மண் தவிக்கிறதே. விடத்தையும், நோவையும், வெம்பகையதனையும் துச்சமென்றெண்ணித் துயரினிற்கு வாழ்ந்த தூயவன் புன்னகை தவழும் வதனம் கால இருளில் மறைந்து போயிற்று. அதுகண்டு கலங்கிய உள்ளங்கள் கிழர்ந்தெழுந்து விழிநீர் வழிய வெதும்பி நிற்கும் காட்சி பேராசானின் பேராண்மைக்குத் தக்க சான்றாக அமைந்து விட்டது.

நாடும் மொழியும் நாமலர் என்றும் தேடும் அழியாச் சொத்தென வாழ்ந்த நாட்டுப்பற்றாளர். அடக்கமும் பண்பும் அணிகலனாக வாழ்ந்த சீரினர். தமிழ் மண் தழைக்க நீடு வாழ நிலை பெறவில்லையே என்ற ஏக்கம் பெரும் பேரிடியே.

புல்லுருவிகள் புதுபுனை கவலைப் பரந்து காணும் கலியுகத்தில் பேராசிரியர் போன்ற செந்நெல் செழித்து வாழவேண்டுமென்றே சான்றோர் நெஞ்சங்கள் அவாவி நின்றன. இந்த மண் செய் தவம் இம்மட்டுந்தானா என்ற ஆழப் பெருமூச்சு ஒரு கணம் ஆவி குலைக்கிறதே தேனூற்ற தீஞ்சுவை மொழியும் வானுயர்ந்த உண்மைசெறி சிந்தனையும், இசை பிறழா இலட்சியப் பற்றுக் கோடும், யதார்த்த காரிய மன்னனாய் எம்மை மகிழ்வித்ததே.

தேச மன்னராக வரும் சேய்கள் எல்லையறு நம் பணியால் செழிப்புற்றது கண்டு மகிழ்ந்தோம். எதிரியும் வணங்கும் இயல்பினனாய் விளைபுரியும் பேராண்மை கண்டு வியந்தோம். பல்கலைக்கழகம் பல்கலை வளம் பெறும் என்று இதயம் தழைத்தோம், கால அரக்கன் கடிதினில் உம்மைப் பிரித்துச் சென்ற கயமைத்தனம் தான் என்னே.

சொல்லும் செயலுமாய் வாழ்ந்த பெருந்தகைக்கு நடத்தேறிய பிரியாவிடை விழாக்களின் எழிற்கோலங்கள் இன்னும் பசுமையாக இருக்கின்றனவே. அந்நிகழ்வுகளிலெல்லாம் மலையெனக் குவிந்த மலர் மாலைகள் உங்கள் நெஞ்சைத் தழுவத் தவிக்கின்றனவே. அவை வாடிக் கதறுகின்றனவே! மண்ணின் விடிவில் நீங்கள் கொண்ட எண்ணமும், ஆற்றிய அரும்பணியும் நிமிர்ந்து நிற்கின்றனவே. சுதந்திர ஞாயிறு நாளை தோன்றும் போது, அந்த புளகாங்கிதப் பூரிப்பில் நீங்களும் அணி செய்யவில்லையே என்று ஏங்கவாய்க்கும் தமிழ் நெஞ்சங்களுக்கு யாது செப்புவோம்?

வையகம் பயனுற வாழ்ந்த வாழ்வே எம் தோற்றத்தின் ஏற்றம். என்றும் எம் உள்ளத்தில் குன்றென நிமிர்ந்துள்ளாய்!

அ. சுந்தரலிங்கம்
இளைப்பாறிய
பிரதேச கல்விப் பணிப்பாளர்
(31348)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பொருத்தமான ஆட்களிடமிருந்து பொதுச் சுகாதார தாதி பதவிக்கான விண்ணப்பங்கள் 1994 ஜூலை 8ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:
ரூபா 3265—19x65—4 500/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்:
(அ) இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தாதிச் சான்றிதழுடன் தாதியாக 12 ஆண்டு அனுபவத்தை பெற்றிருப்பதுடன் அதில் 8 ஆண்டு அனுபவத்தை மாணவர் சுகாதாரச் சேவையில் அல்லது பொதுச் சுகாதார சேவையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றிருத்தல் வேண்டும்
அல்லது
(ஆ) இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுடன் தாதியாக 10 ஆண்டு அனுபவத்துடன் நலம் பேணலின் எந்த அம்சங்களிலாவது முதனிலைக்குப் பிந்திய தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது:
40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:
எழுத்துப் பரீட்சை தெரிவு, நேர்முகத் தேர்வு ஆகியனவற்றின் மூலம்.
மேற்குறித்த சம்பளத்துடன் 1994 டிசெம்பர் 31ஆம் திகதிவரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.
9/93 இலக்க 1993 மே 12ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு ஏற்ப மாதாந்தப் படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.
மாதாந்தப் பல்கலைக் கழகப் படியாக 500/- ரூபா செலுத்தப்படும். மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியாக 860/- ரூபா செலுத்தப்படும்
ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது இப் பல்கலைக்கழகச் சிறாப்பரின் முகப்பு மேசையில் செலுத்தி இப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.
தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும்பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா காசுக் கட்டளை/தபால் கட்டளையுடன் 23x10 ச மீ அளவுடைய சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.
விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலிருந்து ஒய்வு பெற்றவர்களும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்துக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறான விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 70 ஆகும். இளைப்பாறிய ஒருவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டால் இளைப்பாறிய போது கடைசியாகப் பெற்ற சம்பளம் செலுத்தப்படும். விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர் -
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994 - 06 - 08
(சி-8474)

அமரர்

## பேராசிரியர் அழகையா துரைராசா

ஐயனுக்கு இதயம் நெகிழ்ந்த

## கண்ணீர் அஞ்சலிகள்



யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்,
வட்டுக்கோட்டை.
(சி 8501)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

அமரர் பேராசிரியர்

## அழகையா துரைராசா

அவர்களின் பிரிவாற்றாமல்
தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவையினர் வழங்கும்

# இரங்கல்

தாயக மண்ணில்:
10-11-1934



சாவெனும் துயிலில்:
11-06-1994

பல்கலைக்குத் துணைவேந்தர்
பைந்தமிழர் கல்விக்கு
பயன்தந்த பெருவேந்தர்
சொல் செயலில் எண்ணத்தில்
தூயபணி தனைக் கொண்டு
துயர்துடைத்த துரைவேந்தர்
எல்லோரின் உள்ளத்தும்
இடம் பிடித்து நலம் செய்த
இணையில்லாத் தனிவேந்தர்

வல்லோராய் மாணவர்கள்
வாழ்வாங்கு வாழ்வதற்கு
வழிசமைத்த உயர்வேந்தர்
இவர் பிரிவு எமக்கிழப்பு
இவர் பிரிவு மீட்பரிது
இவர் பிரிவு துயர் பெரிது
அவர் வழியில் நாம் கற்போம்
அவர் நெறியில் நிதம் வாழ்வோம்!
அவர் பணியில் நாம் வெல்வோம்!

துணைவரின் இழப்பினால் துயருறும் மனைவியும்
நினைவில் உருகிடும் மைந்தரும் மக்களும்
அனைவரும் துயரினை ஆற்றியே அமைகவே!

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர்
(31429)

## சேர், பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனத்தினர்

யாழ் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர்

## பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின்
சிவபதப் பேற்றைக் குறித்து வழங்கும்

# அஞ்சலி

சிவஞான தத்துவத்தின் பொருளை ஆய்ந்து
சிவபதமே ஒருபேறென் றுணர்ந்த பத்தன்
பவசாகரம் நீக்கி பரமன் பாதம்
பக்குவப்சேர் ஆன்மாவாய்ச் சேர்ந்தா னன்றோ
நவமோன ஞானத்தில் திளைத்த மேதை
நற்கல்வி யாளனெனப் பேறு கொள்ளத்
தவமான பெருமுத்திப் பேறு கொள்ளத்
தாடலைப் பட்டானே தலைவன் தாளை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆக்கம்,
இயலிசைவாரிதி
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்,
யாழ்ப்பாணம்.
(31419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

# பேராசிரியர் அ. துரைராசா அஞ்சலி மலர்

### அரும்பணி புரிந்த அறிஞர்

நமது பல்கலைக்கழகத்திலே சென்ற ஐந்தாண்டுகளுக்கு மேலாக அரியபணி புரிந்தவர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள். சிறிது காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் சென்ற சனிக்கிழமை இயற்கை எய்தியதையிட்டு பெருந்துன்பமும், அதிர்ச்சியும் அடைகிறோம். அவர் மறைவு நமது பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் கல்வியுலகுக்கும் பொதுமக்களுக்கும் நேர்ந்துள்ள பேரிழப்பாகும்.

நெருக்கடிகளும் வசதிக் குறைவுகளும் நிரம்பியதொரு காலகட்டத்திலே பல்கலைக்கழகம் தொடர்ந்தும் நடைபெறும் வண்ணம் வழிநடத்திய அவரது திறமையும் சாதுரியமும் போற்றத்தக்கவை. இங்கு நிலவிய தடைகளையும் இடையூறுகளையும் சமாளித்து உயர்கல்விச் செயற்பாடுகளிலே தளர்ச்சி ஏற்படக் கூடாதென்ற எண்ணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தார். இதன் பொருட்டுச் சகல தரப்பினரின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெற்றுக் கொள்ளும் ஆளுமை அவருக்கு அமைந்திருந்தது. பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் உட்பட அனைவரின் அன்புக்கும் உரியவராக அவர் விளங்கினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உயர்ந்து சிறக்க வேண்டும் என்ற உன்னத நோக்குடன் அயராது உழைத்தவர் பேராசிரியர் துரைராசா. அவர் இங்கு புதிய பீடங்களும், புதிய கற்கை நெறிகளும், புதிய துறைகளும் தோன்ற வேண்டும் என்று திட்டம் வகுத்து அதன் பொருட்டுப் பாடுபட்டார். விளையாட்டுத்துறையும், கலைநிகழ்ச்சிகளும் இங்கு பங்கிப் பெருகுவதற்கு ஊக்கம் தந்தார். நாட்டு மக்கள் நலமுற்று வாழ்வதற்கு உகப்பான சூழ்நிலை தோன்றுவதற்கான பணிகளை மேற்கொண்டார். கல்வி கலைகளோடு நின்றுவிடாமல் விஞ்ஞான மான சிந்தனைகளும் தொழில்நுட்பத் திறன்களும் நம்மவர் மத்தியிலே பிரபலமாக வேண்டுமென்றும் விரும்பி முயன்றார்.

மிக அண்மையிலேதான் அவருக்கு நாமெல்லாரும், சிறந்த அளவிலே பாராட்டு விழாக்களையும், பிரியாவிடைகளையும் நடத்திப் போற்றினோம். அவர் மீது நாம் கொண்டிருந்த பற்றையும், பாசத்தையும் வெளிப்படுத்தினோம். அவர் நம்மை விட்டு பிரிகிறாரே என்ற உணர்ச்சி நம்மை வாட்டியது. அந்தப் பிரிவுத் துயரம் சற்றே ஆறுவதற்கு முன்பாகவே, அவர் இவ்வுலக வாழ்வை நீத்து மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டமை மிகுந்த வேதனையைத் தருவதாகும்.

இத்துன்ப வேளையில் அவரது மறைவினால் வருந்தும் அவர் தம் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும், சுற்றத்தாருக்கும், நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம். அவர்களோடு இணைந்து அவர்களின் துயரத்தினைப் பகிர்ந்து கொள்கிறோம்.

தலைசிறந்த கல்விமானும், உயரிய பண்புகள் வாய்க்கப்பெற்ற பொதுநலப் பணியாளரும் ஆகிய பேராசிரியர் துரைராசாவின் குறிக்கோளையும் நன்நோக்கங்களையும் பேணிப் போற்றுவதும் கடைப்பிடிப்பதுமே நாம் அவருக்கு செய்யத்தக்க கைம்மாறாகும்.

பேராசிரியர்,
க. குணரத்தினம்,
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.

### ஈடு செய்ய முடியாத இழப்பு

பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின் மறைவு எங்கள் அனைவருக்கும் மிகுந்த துயரத்தைத் தருகிறது அவர் மறைவு ஒரு நிரப்ப முடியாத பேரிழப்புமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பத்தில் இருந்தே அதன் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராகவும், பல்கலைக்கழகத்தைச் சமூகத்துடன் நெருக்கமாக இணைக்க வேண்டும் என்னும் நோக்கம் கொண்டவராகவும் இருந்தார். அவர் பதவிக்காலம் நெருக்கடிக் காலமாக இருந்தும், ஒரு பக்கம் பல்கலைக்கழகத்தைச் சிறப்பாக இயக்கியும், மறுபக்கத்தில் சமூக முன்னேற்றத்திற்காகப் பல்கலைக்கழகத்தின் பங்கினை ஊக்கியும் செயற்பட்டு வெற்றியும் கண்டார். அவரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கும், மக்களுக்கும் இறைவன் மன அமைதியைக் கொடுப்பாராக.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை,
கலைப்பீடாதிபதி.
யாழ். பல்கலைக்கழகம்.

### அன்பு வணக்கம்

ஐயா, அரசே, துரையே, நம்
அகங்கள் குழைந்தோம்; அதிர்வடைந்தோம்
செய்கை அறியாதே திகைத்தோம்
திக்கற்றோம் நாம்; திசையறியோம்
இவ்வாறுடனே மறைவர்கள்
என்றா நாங்கள் எதிர்பார்த்தோம்
வெய்தே கொடு நோய் உமை அழைத்த
விதியும் கொடிதே என்செய்வோம்!

முழுமக்களுக்கும் வழிகாட்டும்
முதிர்ந்த அறிவைப் பாடுகிறோம்
பழுதில்லாத நலம் பயக்கும்
பணியின் பெருமை பாடுகிறோம்
பழுதில்லாத நலம் பயந்த
பண்பாய் ஒளிர்ந்து நமைப் பிரிந்த
அழகு துரையே அருநிதியே
அன்பு வணக்கம் - துரையரசே!

தலைவர், நிர்வாக
உத்தியோகத்தர் சங்கம்,

(சி/8486)

### மனித நேயம் கொண்ட தேசத் தொண்டன்

அமரர் பேராசிரியர் துரைராசாவின் மறைவு பல்கலைக்கழகச் சமுதாயத்தை மட்டுமல்லாது, இலங்கை வாழ் தமிழ் மக்களையே பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அவர் துணைவேந்தர் பதவி ஏற்பதற்குப் பல ஆண்டுகள் முன்பாகவே, பல பொது நிறுவனங்களை ஸ்தாபித்து அவற்றின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் பொருண்மிய மேம்பாட்டிற்கு அல்லும் பகலும் உழைத்த தேச பக்தன்.

பல்கலைக்கழகத்தின் மற்றைய பீடங்களைப் போலவே, மருத்துவ பீடத்தின் வளர்ச்சிக்கும் தம்மால் முடிந்த முயற்சியையும் ஒத்துழைப்பையும் நல்கிய பேராசான். இங்குள்ள எங்கள் வைத்திய நிபுணர்களும், மாணவர்களுமே இம்மருத்துவ பீடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்; வெளிநாட்டிலிருப்பவர்கள் வருவார்கள் என நம்பியிருக்க முடியாது என்றும், இங்கு படித்துச் சித்தியடைபவர்கள் இந்த மருத்துவ பீடத்திற்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டாற்ற வேண்டிய தார்மீகக் கடப்பாடுடையவர்கள் என்றும் அடிக்கடி கூறி வந்தார். இப்பெரியாருடைய மறைவினால் நாம் ஓர் சிறந்த அறிஞரையும், மனித நேயம் படைத்த நிர்வாகியையும், திக்கரணசுத்தியுள்ள தேசத் தொண்டனையும் இழந்துவிட்டோம்.

பேராசிரியர்
ச. வை பரமேஸ்வரன்
பதில் பீடாதிபதி
யாழ். மருத்துவபீடம்.
யாழ். பல்கலைக்கழகம்.

### குணக்குன்று

பேராசான் அவர்களுடன் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் என்ற முறையில் 1988ஆம் ஆண்டு முதல் பழகி இருக்கிறேன். புவியியல் துறைத்தலைவர் என்ற முறையில் 1991ஆம் ஆண்டு முதல் அவருடன் பழகியிருக்கிறேன். மாணவருக்காகத் தான் பல்கலைக்கழகம் என்ற ரீதியில் அவர் செயற்பட்டார். அவர் செயற்பாடுகளையோ, ஆளுமைகளையோ வெற்றிகளையோ இங்கு கூறத் தேவையில்லை, அனைவருமே அறிவோம். ஆனால் அப்படியான ஒரு பேராசானை, அதேசமயம் ஒரு சாமானியனைப்போலப் பழகும் ஒரு அழகிய குணக்குன்றை இழந்து விட்டோம் என்பது தான் பெரும் கவலை. ஆண்டவன் அவரது குடும்பத்திற்கும், அன்புச் செல்வங்களுக்கும் எமக்கும் ஆறுதல் தரவேண்டும்.

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்
சிரேஷ்ட மாணவ ஆலோசகர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### ஒப்பற்ற மேதை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள், "கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்னும் குறிக்கோளுடனும், மனித நேயத்துடனும், தமிழ் உணர்வுடனும், வாழ்ந்த ஒப்பற்ற மேதை அவர் மறைந்தமையால் நேர்ந்த துயரம் வார்த்தைகளால் எடுத்துரைக்க இயலாதது. கண்ணீர் மலர்கள் தூவி அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவன் பாதம் சரணடைகிறோம்.

தலைவர்,
தொழில்நுட்பவியலாளர் ஒன்றியம்.
யாழ். பல்கலைக்கழகம்.

### சேவையின் வேந்தன்


யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் பேராசிரியர் அ. துரைராசா இருந்த காலம் விளையாட்டுத்துறைக்கும் உடற்கல்வித்துறைக்கும் ஒரு பொற்காலம். விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தார் நெருக்கடியான காலகட்டத்தில் சவால்களை எதிர்கொண்டு பெரும்பணிபுரிந்த தியாகச் செம்மல். உதவிகள் செய்த உன்னத மனிதன். காலனால் எம்மிலிருந்து பிரிக்கப்பட்ட எமது அன்புத் தந்தையின் ஆத்மசாந்திக்கு எமது பிரார்த்தனைகள்.

தலைவர்.
விளையாட்டு அவை,
விளையாட்டு ஆலோசனைசபை
உடற்கல்வி பிரிவு. யாழ். பல்கலைக்கழகம்

### காற்றுடன் கரைந்த சோதியே!

அன்பால் எமை
ஆண்டு
அறிவொளி வீசிய
ஆதவனே - இன்று
அரவமின்றி
அந்தியினுள்
அமிழ்ந்தனையோ!
சோதி நீ
சேர்ந்துவிட்ட சேதியை
விடிகின்ற காலையில்
விரைந்து வந்த காற்றினுள்
விதைத்தனையோ!
தேசமதை
நேசம் செய்த
நெஞ்சனே
நெடுந்தூரம்
சென்றனையோ
எமை விட்டு.

மருத்துவ மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்



### சேர். பொன் இராமநாதனின் கனவை நனவாக்கியவர்

பேராசிரியர் துரைராசா துணைவேந்தராக பணியாற்றிய காலத்தில் சேர். பொன் இராமநாதனின் திருப்பணிகளில் ஒன்றாகிய யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேகம் நன்கு நடைபெறத் திருவருள் பாலித்தது. வள்ளலாரின் பெயரில் இலங்கிய இராமநாதன் நுண்கலைப்பிரிவு முழுமை பெற்று வளர்ச்சி காண வழிவகுக்கப்பட்டதோடு நமது கலாசாரத்தின் அடிநாதமாகிய திருமுறைப் பயிற்சிக்குத் தனிப்பிரிவு ஒன்றும் உருவாகியது. நாவலரின் குருபூசை பல்கலைக்கழகத்தில் நடைபெற வழி வகுக்கப்பட்டது. இறுதியாக நம்மை விட்டு கொழும்பு செல்லும் போது வள்ளாரின் பெயர் தாங்கிய சேர். பொன் இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனத்தையும் தொடக்கி வைத்துச் சென்றார். சுருங்கச் சொல்லின் நமது கலாசாரத்தின் விழுமியங்களைப் பேணி வளர்த்துச் சென்ற பெருமகன் பேராசிரியர் துரைராசா அவர்களாகும். அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

தலைவர்,
இந்து இளைஞர் சங்கம்.
யாழ். பல்கலைக்கழகம்.

### பெரும்பணி செய்த பெரியார்

பேராசிரியர் அவர்கள் எ மண்ணிலிருந்து கல்விச் சமூகத்திற்கு மட்டும் அன்றி பொதுப் பணிகளிற்கும், மண்ணின் விடுதலைக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் கல்விப் பணியுடன் மட்டும் நின்று விடாது சமூகப் பணிகளிலும் மண்ணின் விடுதலைக்கான பணிகளிலும் இவர் தனது பங்களிப்பினை வழங்கினார்.

அன்னார் எம்மை விட்டுப் பிரிந்துவிட்ட போதும் அவர் எமக்குள் ஆற்றிய பணிகளை என்றும் நன்றியுடன் எம் நெஞ்சில் தாங்கி நிற்கின்றோம்.

தலைவர்,
மறுமலர்ச்சிக் கழகம்.
யாழ். பல்கலைக்கழகம்.

### ஆறாத் துயரம்

தமிழ் மக்கள் அனைவரினதும் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்று எமது தமிழ் மண்ணில் அமைந்துள்ள உயர் கல்விப் பீடத்தின் உன்னத தலைவராக துணை வேந்தராகப் பணியாற்றிய எமது பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களது மரணம் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.

கல்விப் பணியையும், பொதுப்பணியையும் இனிதே இணைத்து எம்மவரின் வாழ்வு எல்லா வகையிலும் ஏற்றம் பெறவே என்ற வாஞ்சையுடன் தமது ஆற்றல்கள், அறிவுத் திறமைகள், நிர்வாக நிறைவுகள் அனைத்தையும் மக்களுக்குக் காணிக்கையாக்கிய இந்த மாமனிதரின் மரணம் எமது இனத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் இறைவன் இவருக்கு நித்திய வான்வீட்டில் இடமளித்து வரவேற்றிட இறைவனை இரந்து மன்றாடுகின்றோம்.

தலைவர்,
கத்தோலிக்க மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்

### கண்ணீர் அஞ்சலி

எமது பல்கலைக்கழகத்தின் முன்னைய துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவினால் எமது பல்கலைக்கழக சமூகம் ஆறாத் துயர் கொண்டுள்ளது. அவர் அன்பின் திருவுருவம்; பண்பின் சிகரம், எனவேதான் குறிப்பாக, பல்கலைக்கழக ஊழியர்களின் பெருமதிப்பைப் பெற்றவர். மேலும் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்காகத் தன்னலம் பாராது அயராது பாடுபட்டவர். இன்று எமது தமிழ்ச் சமுதாயத்திலே இவரின் இழப்பினால் ஒரு பாரிய வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

தலைவர்,
யாழ். பல்கலைக்கழக எழுதுவினைஞர்,
தொழில்நுட்ப அலுவலர் ஒன்றியம்

### எங்கே எங்களின வேந்தர்?

மதியத்தில் கேட்ட செய்தி
மனங்களை நெகிழ வைக்கும்
மனப்பதியத்தின் நினைவுகள்
மனதினில் உயிர்த்திடும்
கண்ணத்தில் நீர் வழிந்து
கால் வழியே ஓடும்
நினைவுகள் நீங்கி நிற்க
"எங்கே எங்களின் வேந்தர்..?"
"எங்கே எங்களின் வேந்தர்...?,
மறுபடியும் மறுபடியும் — எங்கள்
மனங்கள் அழும்!
அழுகை ஆறாகத் தொடரும்
பொழியும் நிலவுப் புன்னகையாய்
எமைநோக்கும் அந்த பூமுகம் எங்கே...?
துணைவேந்தர் மண்டபப் படிகளில்
ஓசை எழுப்பாது
அசையும் அந்தப் பாதம் எங்கே...?
கம்பீர நடையும்
கனிவான பார்வையும்
இனிய வார்த்தையும் இனி எங்கே?
அந்தக் கார் வருகிறது
அந்தக் காரினுள் நாம் காணும்
கம்பீர உருவம் எங்கே?
விடுதலை வேள்விக்கு நெய்யைத் தந்து
போராட்ட சுமைகளையும்
தாங்கி நின்ற பெருந்தேவே!
நீங்கள் எங்கள் வாழ்வின் வழிகாட்டி
உங்கள் வழியே
எங்கள் உயிர் நாடி
எல்லாம் நினைந்து நினைந்து
நினைந்தழுது...
எங்கள் வளாக உயிர்ப் பொருளும்
சடப் பொருளும் ஓ—
ஓ என்று உரக்கத் தேடும்
'எங்கே எங்கள் வேந்தர்...?'
"எங்கே எங்கள் வேந்தர்...?"

வணிகமுகாமைத்துவ
மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

### வழித் துணைவன் நீயே!

உயர்ந்தறிவு தொகுத்தறிவு உண்மையூடாய்
உயர்வான அறிவு ஈந்த உயர் பேராசான்
பட்டறிந்த அனுபவத்தின் படிமச் சுமையால்
பண்பறிந்த உயர்பீட நிர்வாகத்தன்
மட்டறியா பெருமை தேடலுக்காய்
மதிப்பளித்து வழிப்படுத்தும் வழித்துணைவன்
விட்டெறிந்து போய்விட்ட விந்தை தன்னை
வெறுப்புடனே ஜீரணிக்கும்
நிலைக்குட்பட்டோம்.

தற்கால பொறிநுட்ப தகைமைக்கேற்ப
தனித்துவமாய் கலைபடைக்கும்
வடிவமைப்பாளன்
முற்கால துறைசார்ந்த அனுபவத்தால்
முன்னுணர்ந்து கருத்துரைக்கும்
தத்துவார்த்தன்
எக்காலம் மறவாது இருக்கவென்று -எம்
தலைவனிடம் விருதுபெற்ற சான்றோன்
எம்மை
விட்டெறிந்து போய்விட்ட விந்தை தன்னை
வெறுப்புடனே ஜீரணிக்கும்
நிலைக்குட்பட்டோம்.

மெய்யியற் கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மலர் ஏற்பாடு
**யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

கல்வியின் கலங்கரை விளக்காய் நின்று
காலத்தால் அழியாக் காவியம் படைத்த
**துணை வேந்தர் பேராசிரியர்**
**அ. துரைராசா** அவர்களுக்கு
**எமது இதயபூர்வமான**
**கண்ணீர் அஞ்சலிகள்**

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்.
(இ-8497)

---

ஈழத்தமிழர் நெஞ்சத்தில் நிறைந்த
**பேராசான் அ. துரைராசா**
அவர்களுக்கு

# எங்கள் இதய அஞ்சலிகள்



மண்ணையும் மக்களையும் நேசித்த
மாண்பான வாழ்வுக்கு ஏற்றங்கள் சேர்த்தீர்கள்
எண்ணையும் எழுத்தையும் கண்ணாக காத்தீர்கள்
ஈழத்தமிழர் நெஞ்சத்தில் நீங்காத இடம் -
பிடித்தீர்கள்

எளிமையும் இனிமையும் கலந்த உறவே
ஈழத்தமிழரின் தோழமை நீயே
அழியாத ஓவியமாய் ஆகிவிட்ட துரையே
அஞ்சலிகள் ஐயா உங்களுக்கு அஞ்சலிகள்.

(சி-8492) — யாழ் வணிகர் கழகம்.

---

# கண்ணீர் அஞ்சலி

இந்த மண்ணின் மேம்பாட்டிற்காகத்
தன்னையே அர்ப்பணித்த
**பேராசிரியர் அழகையா துரைராசா**

அவர்களின் மறைவையொட்டி அவரைப் பிரிந்து துயருறும் அன்னாரது குடும்பத்துக்கும் ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.


தலைவர்
பணிப்பாளர்கள், பணியாளர்கள்
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்
கைதடி

(சி/8495)

---

அமரத்துவமடைந்த
முன்னைநாள் துணைவேந்தர்
**பேராசிரியர் அ துரைராசா**
அவர்களுக்கு

# எமது இதய அஞ்சலிகள்



சரித்திர நாயகன் சரிந்துவிட்டான் தாய்மண்ணில்
சாவே உனக்கொரு சாவுதான் வாராதா!
விடைகொடுத்தோம் பிரியா விடை கொடுத்தோம்
விடைபெற்று எங்கு சென்றாய்?
தாய்நாட்டுப்பற்றுடனும் தமிழ்மான உணர்வுடனும்
தரணியிலே நடைபுரிந்தாய்
தளராத உணர்வுடனே தலைமையுடன்கல்விக்கு
தாயாகநின்றாய் தவிக்கின்றோம்
பட்டதாரிப்பிரிவு பாங்குடனே வளர்ந்துவிட்டால்
பல்கலைக்கழகமாகும் எம்கல்லூரி என்றுசொன்னாய்
கல்லூரி விழாக்களிலே நீ களிநடம் புரிந்தநாட்கள்
கனவாகமாறியதா நெஞ்சக் கனலாக மாறியதா
கனலான நெஞ்சுடனே கண்ணீரை நுந்தனுக்குக்
காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், உப அதிபர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

பதிவாளர், விரிவுரையாளர்கள்
மாணவர்கள்.
பட்ட தாரிப் பிரிவு,
யாழ்ப்பாணக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி-9494)

---

## புலிகளின் குரல் வானொலியில்

**15 - 06 - 1994**

புதன் இரவு

★ 8.01 — பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
★ 8.20 — ஏர் முனை "நிலம் பண்படுத்தல்" கேள்வி பதில்
★ 8.30 — செய்திகள்
★ 8.40 — நாடகம்—புதிய ஜதார்த்தம்

**16 - 06 - 1994**

வியாழன் காலை

★ 7.02 — மாவீரர் வணக்கம்
★ 7.15 — விடுதலை கீதங்கள்
★ 7.30 — செய்திகள்
★ 7.35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7.40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## ஒத்திவைப்பு

நீர்வேலி ஜூன் 15

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் 13 ஆம் திகதி திறக்கப்படவிருந்த நூல்நிலைய சேவை பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ)

## றோனிக்கு எந்த அமைச்சு?

அமைச்சரவை மாற்றத்தின் போது றோனி டிமெல்லுக்கு பெருந்தெருக்கள் துறைமுகங்கள் மற்றும் கப்பற் போக்குவரத்து அமைச்சு வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நிதி அமைச்சு தவிர்ந்த வேறு அமைச்சு தரப்பட்டால் அதனை றோனி டிமெல் ஏற்பாரா? — இப்படி றோனியின் நெருங்கிய சகா ஒருவரைக் கேட்டதற்கு,

"தேர்தல் முடியும் வரை ஏற்பார். தேர்தலின் பின்னர் அவர் மீண்டும் நிதி அமைச்சராகி விடுவார்" — என்று பதில் அளித்ததாக சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கின்றது (இ-எ)

---

## மனமுயர்த்திய ஏணியே!



அமரர் பேராசிரியர்
# அழகையா துரைராசா

மாணவர்கள் மட்டுமன்றி
ஆசிரியரும் வணங்க
பேணும் ஈழம் மட்டுமன்றி
பிற தேசமும் மதிக்க
வானுறக்கம் மதிக்காமல்
ஓடி மாணிடர்க்கு உழைத்த
காணரிய பெருநிதியே!
கல்வித்தாய் தலைமகனே!
ஏணியென இனமுயர்த்த
எவரைவைத்துப் பிரிந்தாயோ?
தூணிழந்த மண்டபமாய்
தவழ்கின்றோம் துரையவனே!

அன்னாரின் பிரிவால் துயருறும்!
சகோதரி அகிலாவிற்கும் அவர்தம்
குடும்பத்தினருக்கும்
எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பொறியியல் பீட மாணவர்கள்,**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

குறிப்பு:
அனைத்துப் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களையும் இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(31422)

---



# யாழ். லயன்ஸ் கழகத்தினர்
## பேராசான் துரைராசாவை ஆராதிக்கின்றனர்
### 'காசி, பெரியவன்' என்ற துரை-ஒரு கர்மயோகி

"வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவன் வாக்குக்கு, பேராசிரியரின் மரணம் ஒர் தெளிவுரை. மரணத்திற்கு அர்த்தம், "இல்லாமற் போவதன்று", "மீண்டும் பிறத்தல்" என்ற வேத வாக்குக்கு இதுவே சாட்சி. மெய்யான கர்மயோகி எப்படி மரணிப்பான்? வாழும் பொழுதே பூசிக்கப்பட்டவன். தெளிவான கரத்தால் தேசிய விருது பெற்றவன். புதுவையின் பாவால் அர்ச்சிக்கப்பட்டவன். உடலை நீர்த்தால் இல்லாமற் போவாரா?

அப்பாடா, எத்தனை மாணவப் பரம்பரை உகைது தழுவிய எத்தனை புத்திஜீவிகள், பேராதனைப் பல்கலைக்கழகத்தில், மாணவர் சம்மேளனத்தின் உப தலைவராக இருந்த போது, அவர் அதன் காவலர் இரண்டு முறை 'அனைத்துப் பொது மாணவ மன்றத்' தேர்தலில் தோற்ற போது, அதே புன்சிரிப்போடு 'எப்படி' எனத் தட்டிக் கொடுத்தவர். அதிகம் பேசாத கர்மயோகி செயலே முக்கியம் என வாழ்ந்தவர்.

கலாநிதி டேவிட்குமார், கலாநிதி விக்கிரமபாகு, கலாநிதி பாபு ரோபன்றோருடன் சேர்ந்து பேராசிரியர் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட காலத்தில் எல்லோரும் 'கொம்ரட்' என விழித்து தமக்குள் பழகுவார்கள். பேராசிரியரை மட்டும் 'சேர்' போடுவார்கள். அவர்களில் இருவர், இவருடைய மாணாக்கர்கள்.

பேராசிரியரின் நல்ல தெளிவான சிந்தனைக்கு ஒரு சம்பவம். 'புப்பரஸ்' என்ற மலைநாட்டுக் கிராமத்தில், எம்மைச் சார்ந்த தொழிலாளர் சங்கத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம், மாணவ சம்மேளனத்தின் சார்பில் நானும், தொழிலாளர் சார்பில் சிவலிங்கம் என்ற தோழரும், அதில் பங்கு கொண்டோம், பேராசிரியர் அடிக்கல் நட்டு விட்டுத் திரும்பும்போது, கலாநிதி குமார டேவிட்டைப் பார்த்துக் கூறினார், 'அவர்கள் தரும் கோரிக்கைகளை வாங்கி, வாங்கி, வைக்க கூடாது. உடனே முடியுமா, முடியாதா, எனப் பதில் கூறி விட வேண்டும். 'அவர்கள், எல்லாவற்றையும், எங்களையும், பெரிதாக நம்பி விடுவார்கள்' என்றார். உண்மை இடது சாரி இயக்கங்கள் எம்மிடையே, இடை இழந்ததற்கு இதுதானே காரணம்.

[illegible] ஊற்று நிறுவனத்தின் ஆரம்ப காலம். இலட்சிய வேட்கை கொண்ட மாணவர்கள் பலர் ஒரு அபிவிருத்தி முயற்சியாக நெடுங்கேணியில் காணிகளைப் பொறுப்பேற்கும் எண்ணத்தில், அவரை அணுகிய போது, "திட்டமேதுமின்றி சும்மா கதைக்கக்கூடாது. முதலிலும், பலர் முயன்றவர்கள், பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நல இடம். கொஞ்சம் பொறுமையாக, யோசியுங்கள்" என்றார்

'காசி பெரியவன் என்ற துரை' என்ற கூற்று ஒன்று பல்கலைக்கழகத்தில் எம் மத்தியில் நிலவியது பலருக்குத் தெரியும். கலாநிதி காசிநாதன், அவரும் ஹாட்லிக்கல்லூரியே. மெய்யியல் துறையில் மேதை. பலரும் ஏற்றுக் கொண்ட உண்மை இது. அவர் பலரைப் 'பேக்குஞ்சு' என்பார். எவரையும் இலேசில் ஏற்றுக் கொள்ளமாட்டார் அவரைச் சூழ எப்போதும் ஒரு கூட்டமிருக்கும். அடுப்படி கொட்டு அண்ட வெளிவரை விமர்சிக்கப்படும் பொறியியல் மாணவர்கள் பலர் பின்னால் திரிவார்கள். அவரே, பேராசிரியரை 'அவன் பெரியவனப்பா' என்பார். இன்று அவர் எமது நாட்டில் இல்லை. பேராசிரியர் இருக்கின்றார்.

---

லயன் யுகபாலசிங்கம் M A. (Ph ) Dip. - in - Ed

---

பேராசிரியர் பெரியவர்தான். அவரின் மாணாக்கர்கள் பலர் அவரின் துறை சார்ந்த பெருமைகளைக் கூறக் கேட்டுள்ளோம். ஒரு முறை, கல்லோயா அணைக்கட்டின் வால் பகுதியில் ஒரு வெடிப்பு. இலங்கை அரசாங்கம், மூன்று ஜப்பான் பொறியியலாளர்களை ஒழுங்கு செய்தது. அப்போது, பேராதனைப் பேராசிரியர் ஒருவரின் வேண்டுகின் பேரில், அப்பொறுப்பை அரசாங்கம் எமது பேராசிரியரிடம் ஒப்படைத்தது. வாலும் தப்பியது. நாடும் மீண்டது.


"தன்னுடன் செல்வது வேண்டின், அறம் செய்க" என்பது நாலடியார் வாக்கு. பேராசிரியர் அறம் செய்தவர் சிதையின் வாக்குக்கு ஏற்ப, பலனை எதிர்பாராது கடமையைச் செய்த கர்மயோகி எந்நேரமும் தாயும் கொஞ்சிக்குலாவிய மண்ணிலே பிறந்து மண்ணிற்காய் வாழ்ந்து இம் மண்ணிலே உடல் நீத்தவர், இலங்கையில் உள்ள லயன் கழகங்கள் அத்தனையிலும், அவரது மாணாக்கர்கள் உளர், அன்பர்கள் உளர், அக்காலை அவரது சமூக சேவை முயற்சிகளில் பங்கு கொண்ட நண்பர்கள் பலர் உளர். அவர்கள் அனைவரின் சார்பிலும் வாழ்க அவர் நாமம்! வாழுவோம் அவர் வழியில் — யாழ் லயன்ஸ் கழகம்.

LIONS CLUB OF JAFFNA

**யாழ். லயன்ஸ் கழகம்.**
48, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

---

# துரைராசாவுக்கு நிகர் யார்?



எமது மண், எமது மக்கள், எமது மாணவர்கள், எம்மவர் கல்வி என்னும் நிலைப்பாட்டுடன் அன்றும் இன்றும் வாழ்ந்த ஓர் மாமனிதன், மாமேதை, மனிதருள் மாணிக்கம் மறைந்த பேராசிரியர் துரைராசா. அன்பிற்கும், பண்பிற்கும் ஓர் உதாரணம். புன்முறுவல் பூத்த உதடு. மற்றவர்களைப் புண்படுத்தாத பேச்சு எளிமையான பண்பு. கருணை, காருண்யம், மற்றவர்க்கு உதவி செய்யும் மனப்பாங்கு நாட்டுப் பற்றும் இனப்பற்றும் நிறைந்த உயர்ந்த உத்தமன். இவை அனைத்தும் ஒன்றே உருவெடுத்தவர் அவர். ஓர் வெள்ளை மனம் படைத்தவர்.

இம்மகான் தன் நாட்டில் மட்டுமன்றி பிற நாடுகளிலும் தமது வழமையான சீரிய பண்பினால் உயர்ந்தவரென கணிக்கப்பட்டுள்ளார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இவர் இங்கும் வெளிநாடுகளிலும் பேராசிரியராக மட்டுமன்றி பொறியியல் துறையில் பீடாதிபதியாகவும் பல்லாண்டு காலம் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இது மட்டுமன்றி 1961 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ச் (Cambridge) பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். கொழும்பு திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடாதிபதியாக இருந்த இப்பெருமகன், எமது மக்களின் கல்வியில் அக்கறை கொண்டு மிகவும் நெருக்கடியான காலத்திலும் யாழ் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்று எமது சிறார்களின் கல்வி உயர்ச்சியில் அக்கறை கொண்டு மாணவர் கல்வி மேம்பட சொல்லொணாப் பாடுபட்ட ஓர் அரிமானத் தொண்டனாவார் இவரின் புகழ் எம் பகுதியில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் வெளிநாடுகளிலும் கொடிகட்டிப் பறக்கிறது.

அன்னார் கல்வித் துறையில் மட்டும் அன்றி, பொதுச் சேவையிலும் தம் பணியை இணைத்துக் கொள்ளத் தவறவில்லை. இதில் ஒன்றுதான் அவர் எமது செஞ்சிலுவைச் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவராகவும் ஆளுநர்சபை உறுப்பினராகவும் விளங்கியமை ஆகும். அவர் எமது செஞ்சிலுவைச் சங்கத்தின் வளர்ச்சிக்கு உழைத்தது மட்டும் அன்றி தேவைப்படும் நேரம் எல்லாம் எமக்கு ஆலோசனை கூறி எம்மை வழிநடத்திய சோமகனார் என்றால் மிகையாகாது. இவர் நலிவுற்றோரின் நலன் கருதி பெரியோர், சிறியோர், வறியோர், செல்வந்தர் என்னும் பாகுபாடின்றி ஏற்ற நேரத்தில் உதவிகளைச் செய்த உத்தமன். புகழையோ, பெருமையையோ வெறுத்தவர். அன்னாரின் ஆவி பிரிந்தாலும் அவர் ஒவ்வொரு தமிழ் மகனின் இதயத்திலும் பிரகாசித்துக் கொண்டே இருப்பார்.

துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் அனேகர் உலகில் பணிபுரிந்த போதிலும் கலாநிதி அழகையா துரைராசா அவர்களைப் போன்ற ஒருவரைக் கண்டறிவது அரிதிலும் அரிது. அதிலும் அரிது அவருக்கு நிகரானவரைக் கண்டறிவது.

அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களுக்கு நிகர் எவரும் இல்லை. அவர்தான் அவருக்கு நிகர் என்றே கூறலாம்.

அவரின் இறப்பு தமிழர் கல்வி உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு. அன்னாரின் குடும்பத்தினருக்கு செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை சார்பில் ஆழ்ந்த கவலையையும், அனுதாபத்தையும் தெரிவிக்கும் அதே வேளையில் அவர் எம் மதியில் வாழ்வார் என்பதனை நினைந்து ஆறுதல் கொள்வோமாக.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."
"வாழ்க வேந்தர் வாழ்க வேந்தர் வாழ்க வேந்தர்
எம் அன்பு வேந்தர் துரைராசா"

**இலங்கை செஞ்சிலுவைச் சங்க**
**யாழ்ப்பாணக் கிளை**

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் அருள்மிகு
## ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

**மஹோற்சவத்தை**

முன்னிட்டு

**02 – 06 – 1994, 11 – 06 – 1994**

வரை

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

அவர்களால் நிகழ்த்தப் பெற்ற

**'மகாபாரத'**

தொடர் சொற்பொழிவின்

பூர்த்தி வைபவம்



இன்று (**15 – 06 – 1994**) புதன்கிழமை இரவு 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

விடயம்: குருஷேத்திரம்

❋ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ❋

திருவிழா உபயகாரர்கள்.

விளம்பர அன்பளிப்பு:

**பிள்ளையார் ஸ்ரோஸ்**

புகையிரத வீதி, சுன்னாகம்.

[31418]


# குருநகர் மீதான தாக்குதலை நிறுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

மண்டைதீவில் இருந்து குருநகர் பகுதி மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ். வேலணை அரச அதிபர் திருமதி. ப. நிகைநாயகம் பாதுகாப்பு அமைச்சு செயலாளரிடம் கோரியுள்ளார்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு அனுப்பிய அவசர செய்தியிலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த இரு தினங்களாக மண்டைதீவு முகாமில் இருந்து குருநகர் பகுதி நோக்கி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் ஆயிரத்து 500 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 7பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். ஆகவே இத்தாக்குதலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்று கோரியுள்ளார். (உ-3)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

பேராசிரியர் அழகையா துரைராசா

(முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

கல்விப் பேராசானாக இருந்து உயர்கல்விக்காக தன்னலம் பாராது சேவையாற்றிய அமரருக்கு எமது கவலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

துயரில் பங்கெடுக்கும்;

ஞானம்ஸ்

படப்பிடிப்பாளர், ஹோட்டல் ஸ்தாபனத்தார்

(சி-8282)



## கண்திறந்து எழுந்தால் என்ன?



அமரர் பேராசிரியர் அ. துரைராசா

மண்ணினில் மலர்ந்த பண்பால்
　மாவிட்ட நேயம் காத்தாய்
எண்ணரும் செயல்கள் ஆற்றி
　ஏற்றதோர் தலைவன் ஆனாய்
கண்ணினில் நகையும் மின்னக்
　கனிவுடன் உறுதி சொல்வாய்
பல்கலைக் கழகம் வந்தும்
　பைமிளா துலகம் சுற்றி
இல்லாரும் நாட்டைக் காக்க
　மீண்டுமே வருவேன் என்றாய் - நாம்
பண்ணிய பாவம் என்ன
　பறந்து நீ போனதென்ன - எம்
கண்ணினில் நீரும் இல்லை
　கண்திறந் தெழுந்தால் என்ன!

அரச அதிபரும்,
செயலக ஊழியரும்.

(கி-8491)



வெம்பிமனம் நொந்து வேதனையும் மிக அடைந்து

# கம்பன் கழகத்தாய் கண்ணீர் வடிக்கின்றாள்!

## கவிழ்ந்தது கல்விக் கோயிற் கோபுரம்

துன்பமா? எங்கள் வாழ்வின்
　தொடர்கதை; மண்ணில் கொண்ட
அன்பினால் நிறைந்த செம்மல்
　அருமையாய் அறிவை ஆண்ட
பண்புளர்; புகழிற் பூத்த
　பல்கலைக் கழக 'வேந்தர்'
சென்றாராம்...! அதிர்ச்சி மீளாச்
　சேதியாற் சிதறிப் போனோம்!

தொல்லைகள் சூழ்ந்த இற்றைத்
　தினத்தில் தடையா? வெளியூர்
செல்லலாம்; சுகமாய்ச் செல்வஞ்
　சேர்க்கலாம்; ஆனால்...சேரும்
சொல்லினைக் காக்க என்று
　சுகமெலாம் இழந்து; கற்கும்
எல்லையை உயர்த்தி விட்ட
　இமயமே! மறக்க மாட்டோம்.


விடை சொலும் வைபவங்கள்
　விருதுகள்; வாழ்த்துத் தந்தே
மடைசொரி அன்பு, நன்றி
　மதிப்பினை நாங்கள் காட்டி
"திடமுடன் வாழ்க" என்றோம்,
　சிரித்தநீர்... அதற்குள் போனீர்
கடவுளே! கண்ணீர் ஊற்றிக்
　கலங்குறோம்; வீழ்ந்தோம்; தேறோம்.

நாடொறும் நெருப்புப் பட்டு
　நசுங்கியும் நிலைாய்த் தேய்ந்தும்
வாடியும்; 'வெளிச்சும்' என்றே
　விளைத்தமாய்; வீழ்ந்து போனீர்
ஓடி 'நீர்'; வறண்டு போனோம்.
　ஓம்! இனிப் பூக்கும் நாளைக்
கூடுமா? குவியும் குப்பை
　கொழிக்குமா? கலங்குகின்றோம்!

கலங்கரை ஒளியும் தேய்ந்ததே
　கலைந்ததோ? எங்கள் ஞானப்
பழம் தரும் பாவை பூவாய்
　படுத்ததோ? காலை......கண்முன்
உலம் வரும் வட்டச் சோதி
　வறண்டதா? விதியோ! எங்கள்
பலம் எனாம் 'பாறல்' நாங்கள்
　பண்ணிய பழியோ? சொல்லு!

ஆற்றுநீர் வற்றும்; ஆனால்
　அன்பு வேர் பட்டுச் சாய,
கூற்று எம் கல்விக் கோயிற்
　கோபுரம் உம்மைத் தெற்கில்
நேற்றுமே கொண்டான்; சொன்னார்!
　நெருப்பெலாம் நெஞ்சில் பாய்ந்தும்
போற்றுறோம்; சிந்தே கண்ணீர்ப்
　பூக்களால் படையல் செய்தோம்!

செல்வன் த. ஜெயசீலன்,



## தேடாமல் தேடிய தேன் பொநது

(வெண்பா)

ஆற்றுக் கிளைகள் ஆயிரமாய் பாய்கையிலே
ஊற்றுத் துளை தூர்ந்துவிட்டதுவோ - நேற்றும்
சமயம் விரித்ததையென் கண்கொண்டு பார், தேன்
நிமலனடி சென்றனையோ நீ

(சிந்து)

அறிவென்ற சொல்லுக்கு அர்த்தத்தை கற்பித்த
ஆசானுன் ஆத்மாவே சாந்தி - இனி நாங்கள்
ஆதவனிலா சூரிய காந்தி

வாய்ச் சாலம் இல்லாத வல்லாளன் நீயென்று
வளர்கின்ற இளமைக்குத் தெரியும் - அந்த
வாச மலரா பற்றி எரியும்

தாம் மண்ணின் மீதந்த தன்மானவாதிக்கு
தம்பட்டமடிக்காத பற்று - அறிவை
தாராமல் ஓடவில்லை வீற்று

சூடாமல் எம் இதய அஞ்சலிகள் சூட்டிய நீர்
தேடாமல் தேடிய தேன்பொந்து - உமையேற்றி
பாடையிலே பாடுகதோ சிந்து

செல்வன் ச. முகுந்தன்,

## சந்திர கிரகணம்

இருள் சூழ்ந்து
இறுக்கமுடன்
இன்று எம் தேசம்

நீல வான் ஒளியிழந்து
நிர்மலமாய் எங்கணுமே
நீண்டு கிடக்கிறது

இந்தப்
பூரணையில் கூட கிழக்கு
பொலிவிழந்து இருக்கிறது

ஓ!
சுந்தர வானில் – இப்போ
சந்திர கிரகணம்

மரண ராகுவின்
வாய்க்குள் – எங்கள்
மதி

பட்ட இடமெல்லாம்
பச்சைத் தளிர் துளிர்க்க
பாலாறு பாயாத
பாலைநிலம் எம்
பூமி

பாலாறு பாய்ந்த
பாலைநிலம் என்றாலும்
படிப்பாறு பல ஓடி
பலன் விளைக்கும்
பதி – மருதம்

வறண்டிருக்கும் அறிவு
வயல்களுக்குப் பாலூட்டி
வளங்கொழிக்க வைத்த
எம் வைகை
வடிந்து போய் பயன் நீங்கி
வங்கத்து உவர்நீரின்
வாய்க்குள் விழுந்தது

சலசலப்பின்றி
சங்கீதமாக
சஞ்சரித்துக்கொண்டிருந்த – ஓர்
சாத்வீக ஆறு
சாகரத்தில் – இன்று
சங்கமமாகிவிட்டது

மரண முற்றுகையில்
நம்மண்
மண்டியிட்டிருக்கிறது

இன்று வரை
சிற்றரசுகள் தான்
சிரசிழந்தன – ஆனால் இப்போ
சரிந்துள்ளதோ – ஓர்
சாம்ராஜ்ஜம்

அரைவேக்காட்டு
அறிவுடன் தான்
அந்தகனும் கூட –
இல்லையென்றால்
அகத்தியத்தை எடுத்து
அக்கினிக்குள் இடுவானா?

எங்கள்
பாவக்கணக்குகள்
ஏன் - இந்த
பரிசுத்த ஆத்மாவில்
பதியப்பட்டன?

உலகம் தொடர்ந்தும்
உருளும்
அரவம் மதியை
உமிழும் – மீண்டும்
எங்கள் வானில் – அந்த
திங்கள் எழும்-
அதுவரையில் இனியேனும்
புண்ணியம் சேர்த்து
வைப்போம் - வரப்போகும்
பொக்கிஷத்தைக் காப்பதற்கு

செல்வன் த சிவசங்கர்

கம்பன் கழகங்களின் காப்பாளர் பேரறிஞர் பேராசிரியர்

# அமரர் அ. துரைராசா அவர்களுக்கு

**● எமது கண்ணீர் அஞ்சலிகள் ●**

அகில இலங்கைக் கம்பன் கழகம்,
காரைநகர்க் கம்பன் கழகம்,
வடமராட்சிக் கம்பன் கழகம்.

திருகோணமலைக் கம்பன் கழகம்,
ஊரெழுக் கம்பன் கழகம்,

(சி 8487)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சரசாலை வடக்கில் அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வீடு கட்டக்கூடிய நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு: க. நடராசா, ஐயனார் வீதி, சரசாலை வடக்கு அல்லது இ. சிவானந்தம், நகரசபை பொது நூலகம், சாவகச்சேரி. (சி-8479)

## தேவை

கொம்போசிட்டர், பைண்டர் தேவை. நேரில் வரவும். இல. 23, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (7449)

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கப் பணிமனையில் கடமையாற்றுவதற்கு பெண் சமயற்காரர் தேவை: விரும்புவோர் 24 - 6 - 94ஆம் திகதிக்குமுன்னர் விண்ணப்பங்களை 'பிலிப் நேர்சிங்கோம்' கட்டடம். இல. 228, பிரதான வீதியில் நேரில்கொண்டு வந்து சமர்ப்பிக்கலாம் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கவும். தலைவர், வ. மா. பு. நோ. த. சங்கம். (சி-8484)

## தவறிவிட்டது

கோயில் வீதி, செட்டித் தெரு, மருதடி வீதிகளுக்கு இடையில் ச. இரகுவரேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதிப்பத்திரம் உள்ளடக்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து ச. இரகுவரேந்திரன், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (31414)

13-6-94 அன்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து நெல்லியடி செல்லும் 750 பஸ் பாதையில் மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கிய கடிதங்களுடன் மக்கள் வங்கி தினக்குறிப்பு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். க. குமாரசாமி, மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (31415)

## அறிவியல் சஞ்சிகைகள்

"மின்னல் செய்தி", "ஊற்று" ஆகிய சஞ்சிகைகளின் பழைய பிரதிகள் விற்பனைக்குள்ளன. 'மின்னல்'. (சி-8482)

## புதிய வகுப்புகள்

Yogi Home Science Academy 15-6-94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர், யாழ்ப்பாணம். (31359)

## மனித உயிரியல்

மனித உயிரியல் - I சே. டி. அருட்பிரகாசம். விலை 260/- மனித உயிரியல் - I செல்வவேல் M. P. விலை 165/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8269)

## பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கலை முதற் தேர்வுக்கான பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெறும். இதற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

விஞ்ஞான முதற் தேர்வுக்கான (G S Q செயன்முறைப் பரீட்சை 18ஆம் திகதியும், விஞ்ஞான பட்டதாரிகளுக்கான (B Sc) பரீட்சை ஜூலை மாதம் முதலாம் திகதியும் நடைபெறும் என யாழ். அரசாங்க அதிபர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார். (ஒ—162)

## குருநகர் மக்கள் இடம்பெயர்வு

மண்டைதீவுப் பகுதியிலிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களை அடுத்து குருநகர், றெக்லமேஷன் பகுதி மக்கள் இரவு வேளைகளில் குடியிருப்புகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர்.

இதன்காரணமாக மாலை 5.மணிக்குப் பின்னர் குருநகர் வீதிகள் வெறிச்சோடிக்காணப்படுகிறன. (உ-51)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், பேராசிரியருமான

அமரர்

கலாநிதி அ. துரைராசா

அவர்களுக்கு

எமது

கண்ணீர்ப் பூக்களை

காணிக்கையாக்குகின்றோம்.

— யாழ். மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றமும், கிளைக் கழகங்களும்.

(31403)

---

## நெஞ்சம் நெகிழ்ந்துருகும் கண்ணீர் காணிக்கை



### அமரர் பேராசிரியர் அ. துரைராசா

கல்வியில் நெடிதுயர்ந்த பேராசானே
கலங்கரை விளக்கம் போல் எமக்கு
காலம் எல்லாம் காட்சி கொடுப்பாய் என
காவல் நாம் இருக்க கடிதென ஒரு பொழுதில்
காலன் உனை கவர்ந்து சென்றானோ

பேராசானின் மறைவால் துயருறும் அனைவருக்கும் ● எம் அனுதாபங்கள் ●

— ஓம் சாந்தி —

மங்கள எக்ஸ்போட்ஸ்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[31400]

---

## கண்ணீர் அஞ்சலி



### பேராசிரியர் அ. துரைராசா

அவர்களின் பேரிழப்புச் செய்தியினால் ஆறாத்துயரில் மூழ்கி நிற்கிறோம்,

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்,
பழைய மாணவர் சங்கம்,
புனித. பத்திரிசிரியார் கல்லூரி.

இல 59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-8480]

---

## IN MEMORIAM

Our homages to the indelible memories left with us by



PROFESSOR
**A. THURAIRAJAH**
Former Councillor

Engineer par excellence. Administrator with a human heart. Intellect who never lost the common touch. truly a great 'Son of the soil'

In grateful memory of what he has done and been to us

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI

[C-8476]

---

## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் துணைவேந்தர்

பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு

எமது இதய அஞ்சலிகள்

சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

(31412)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், இணையற்ற கல்விமானும், சமூக நேசிப்பாளருமான,

பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலி.

பாமினி என்ஜினியர்ஸ்
அன்ட்
கொன்றாக்ரேர்ஸ்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(31411)

---

## இதய அஞ்சலி

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது"

முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும், பொறியியற்றுறை

பேராசிரியருமான அமரர்

அழகையா துரைராசா

அவர்களுக்கு

எமது இதய பூர்வமாக அஞ்சலிகள்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவிகள்.
யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய்.

(31417)

---

அமரர் பேராசிரியர்

அ. துரைராசா

அவர்களுக்கு

எமது

## கண்ணீர் அஞ்சலி



நல்லோய் நாடு நலம் பெறவே
நாளும் உழைத்தோய், சாதனைகள்
கண்டோய், கல்வி வழங்கியவா,
விரைவில் வள்ளால், வசமாக்கும்
சொல்லோய், தூயாய்,
சூழறிவுத்து றையில் தோன்றிச் சுடர் மணியே
எல்லோர் தமக்கும் இனிய துரைராஜ,
சிங்கே றனையானே.

தேசப்பற்றோடித் நேசக் கல்விச் சேவை செய்சில
மாசற் றிந்தத் தமிழீழ மக்கள் கல்வி வளம் பெறவே
பூசற் காலம்
யாழ்ச் சர்வகலாசாலைக்கோர் உபவேந்தாய்,
நேசப் பணி செய் துரைராஜ,
நீயே நினக்கு நேரானாய்.

அறிஞர் அறிவன் என்னும்
தலைமை ஆற்றல் பதவி அமைந்திருந்தும்,
செறிஞர் உதவ முன்வந்தும்,
செல்வமிருந்தும் நிகைப்பிலியாய்,
வறிஞர் ஏழை மக்களென்ன
வாழ்ந்து காட்டி எமைவளர்த்த
குறிய துடையாய் துரைராஜ,
குபேர, சுகுண, சுகுமாரா.

கமழும் மலரும், கருப்புரமும்,
கரும்பும் சாந்தும், கமழும் போல்
நிமல நினைவோடுனை எமக்கே
நீ லேகித் திட்டாய் துரைராஜ
தமிழும், தமிழர் தம் வாழ்வும்
தாழ்வின் நீங் கித் தழைத்துயர
அமிழ்த மாக அளித்திட்டெம்
அந்தோ நமரனாய் அமர்ந்தாய்.

தூகன் கல்வி நிறுவனர்,
ஆவரங்கால்.

[31404]

---

## நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் தேவைப்படுகின்றனர்.

நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன்
எதிர்வரும் வியாழன் (16-06.94)
அல்லது
வெள்ளி (17 - 06 - 94)
காலை 10 மணிக்கு
கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ
பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல. 10, செம்மியன் வீதி,
கொக்குவில்.

[சி-8450]

---

## காற்றுடன் நீ கலந்ததென்ன?

### பேரறிஞர் அ. துரைராசா

வறுமையினால் உயர்கல்வி
வாய்ப்பிழந்து நம்மவரும்
கொடுமைபுரி அரசு செய்த
தரப்படுத்தல் முறையதனால்
செழுமையுடன் கல்விபெறும்
வாய்ப்பிழந்த வல்லவரும்
எழுச்சிபெற எண்ணிநல்ல
"தொழிலாளர் கல்வி" யெனும்
ஏற்றமிகு வழிபதனை
பல்கலையில் சமைத்தவனே
சாற்றுமுந்தன் கனவதனை
நனவாதல் காணுமுன்னே
காற்றுடன் நீ கலந்ததென்ன?
கண் கலங்கவைத்ததென்ன?

தொழிலாளர் கற்கைநெறி
பழைய மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(31409)

---

## கண்ணீர்ப் பூக்கள்

அமரர்

பேராசிரியர் அ. துரைராசா

(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

தமிழ் மண்ணின் கல்விக்கு முடிசூட்டி
தன் வாழ்வின் உழைப்பைங்கா உருகவிட்டு
விடியலுக்கு விதைபோட்ட செஞ்சுடரே - உன்
மறைவுக்குத் திரைபோட மறந்தோமோ!

அதிபர், ஆசிரியர், மாணவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

(சி-8483)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக
முன்னாள் துணைவேந்தர்

பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு

எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அன்னாரது குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

— தென் மட்டுவில் ஐ.நா. சங்கம்

(31410)

---

## கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர்

அழகையா துரைராசா

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
கலாநிதி அ. துரைராசா

மனிதநேயமிக்க சமூக சேவையாளன், மக்கள் மனங்களைக் கவர்ந்த மாமனிதர், மக்களோடு மக்களாக தொண்டாற்றியவர், கல்விக்காக இரவு பகல் பாராது உழைத்தவர், சிறந்த கல்விமான்களை உருவாக்கியவர். தான் கற்ற கல்விக் கூடங்களுக்கு சேவையாற்றியவர், சிறு வயதிலேயே பட்டதாரி இடத்தைப் பெற்றவர், மேல் நாடுகளில் சேவையாற்ற விரும்பாது தான் பிறந்த மண்ணுக்கும் பொன் நாட்டுக்கும் சேவையாற்ற வளங்கொண்டு மேல் நாட்டுச் சேவையைத் துறந்தவர், உடுப்பிட்டி அ. மி. கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவருமாகிய இவர் உடுப்பிட்டி இமையாணன் பெற்றெடுத்த கல்விப் பொக்கிஷம்.

அன்னாரின் மறைவால் துயருறும் அவரின் குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

— உடுப்பிட்டி வர்த்தகர் சங்கம்.

(31421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி



பேராசான்
**கலாநிதி அழகையா துரைராசா**
அவர்களுக்கு

கல்வியின் தந்தையே பேழையில் பேருறக்கம் கொள்ள எம் இதயம் வெடிக்கின்றது. நீங்கள் உறங்கினாலும் உங்கள் நினைவலைகள் உறங்காது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

திரு வீடியோ விஷன்

நவிண்டில்,
கரணவாய்.

(3 1423)

---

## ரூ. 1 முத்திரை தட்டுப்பாடு நீங்கியது

யாழ். குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் நிலவிவந்த ஒரு ரூபா முத்திரை தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

நேற்று முன்தினம் 'மாஹோ' கப்பலில் வந்த பெருமளவு ஒரு ரூபா முத்திரைகள் தபாலகங்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

யாழ் பிரதம தபாலகத்திற்கு மட்டும் 73 ஆயிரம் பெறுமதியான ஒரு ரூபா முத்திரைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

## கடற்றொழிலாளர் சங்கங்கள்

தென்மராட்சிப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இடங்களில் கடற்றொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

---

**புதினம்**

**15-6-1994**

இதழ்
விற்பனையாகிறது

(சி/8281)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் அருளம்பலம் கந்தையா

பிறப்பு: 15 — 09 — 1902
இறப்பு: 16 — 05 — 1994

உறுதியான உடலும், தளராத உள்ளமும், தவறாத தெய்வ வழிபாடும் கொண்டு எமக்கு உறுதுணையாக இருந்த எமது ஆருயிர் தலைவா! உன் ஆத்மா சாந்தியடைய என்றும் பலாவடி அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

— குடும்பத்தினர்.

சிவன் கோயிலடி,
புத்தூர் மேற்கு

(3142)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
**அமரர் பேராசிரியர் அ. துரைராசா**
அவர்களுக்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்

பி. எஸ். எம். எஸ் மருத்துவ சங்கம்
கைதடி

(7838)

---

மறைந்த
**பேராசிரியர் அ. துரைராசா**
அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி

சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தைத் தாமே பெருமனத்துடன் திறந்து வைத்து, அதன் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்களிப்பு ஆற்றிய பெருமகனுக்கு எமது இதயம் நெகிழும் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர்,
விரிவுரையாளர்கள்,
பொறுப்பாளர், மாணவர்:
இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம்

(சி-8502)

---

## மீண்டும் வருக துரையே!



தலைவா!
நீ பிறந்ததால்
எம் மண் உயர்ந்தது

உன்
அறிவினால்
உலகுயர்ந்தது
மிளிர்ச்சியினால்
நிமிர்ந்தது - எம்
கல்லூரி.
நிகரில்லா - உன்
சட்டுமானப் பணியால்
நிறைந்தது - எம்
ஈழம்.

எனினும்,
கட்டுமான வேலைகள்
நிறைய வே உண்டு
மீண்டும் ஒருமுறை
துரையே வா!
எம்மவர் தேவைகளை
நிறைவேற்றி - பின்
மலரவன் மலரடி
அணைவாயே!

— வேலணை சேர். வைத்தியலிங்கம்
துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம்.

(சி-8498)

---

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்
**அமரர் அழகையா துரைராசாவுக்கு**
**ஈழத்துக் கலைஞர்களின்**

## கண்ணீர்க் காணிக்கை

**கோடியிலே நீயொருவன்!**

பூமாலை சூட்டியுன்றன் பூதவுடல் போகவிட்டோம்
பாமாலை யொடுகண்ணீர்ப் பன்னீர் சொரிந்தழுதோம்
நாமாளும் இசைபட்டப் படிப்பென்றுயரவைத்த
கோமானே துரைராசா கோடியிலே நீயொருவன்!

பொன். சுந்தரலிங்கம்.
தலைவர்,
இளங்கலைஞர் மன்றம்.

சட்டநாதர் வீதி, நல்லூர்.

[சி-8496]

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக
முன்னாள் துணை வேந்தர்
**பேராசிரியர் அ. துரைராசா**
அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி

ஈழத் தமிழரின் விடிவுக்காக இன்முகத்துடன் உழைத்து உறங்கி இருக்கும் பேராசிரியரே நீங்கள் உறங்கவில்லை!


பணிப்பாளர் சபையும், பணியாளர்களும்,
யாழ் மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், (வ து)
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-8499)

---

# நினைவுகள் என்றும் உலராது
# நீ வளர் கல்வியோ தளராது

**தன்னலம் கருதாத தாய்நாட்டின் மீது**
**பற்றுக்கொண்ட**
**தனிப்பெரும் கல்விமான்**



யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

# பேராசான் அ. துரைராசா

அவர்களுக்கு

# எமது
# இறுதி வணக்கங்கள்

குருதி படிந்து உறைகின்ற நாட்டிலே
உறுதி நிறைந்து உலவிய அண்ணலே!
கெடுதி ஆயிரம் குவியினும் கல்வி
கெடுதலின்றிக் காவல் செய்தவரே

**வேந்த நின் புகழ் கூறிடுவோம் ஏந்து நன் மலர் நாமிடுவோம்**

'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்'
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,
தமிழீழம்.

(சி. 8491)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு

# தென்மராட்சி மக்களின் கண்ணீர் அஞ்சலி

## எதனையும் நிறைவேற்றும் ஆற்றல் நிறைந்த கல்விமான்

தமிழன் தவம் செய்தானா? ஆம் செய்தான்! அதற்குச் சந்தேகம் எதுவுமே வேண்டாம். தமிழனின் தவமே உருவாக உதித்தவர் அமரர் பேராசிரியர் துரைராசா அவர்கள்.

சாதாரண குடும்பத்திற் உதித்து, தனது ஆரம்பக் கல்வியை முடித்து, பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்று, அங்கு கல்வித்துறையில் பல சாதனைகளை நிலைநாட்டியவர்.

''அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு''

என்று திருக்குறள் கூறுவது போல் அன்பு, அறிவு, ஆராய்ந்து தெளியுந்தன்மை, பேராசையின்மை ஆகிய இந் நான்கு குணமுமெனாம், நன்கு பொருந்திய தெளிந்த சிந்தனையுடையவர் பேராசிரியர் அவர்கள்.

அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை மிக நெருக்கடியான காலத்தில் 1988ஆம் ஆண்டில் ஏற்றார். ஆழ்ந்த அறிவும், எதையும் நிறைவேற்றும் ஆற்றலும் கொண்டவர் அவர். அவரின் காலத்தில் பல்கலைக்கழகம் பல விதத்தாலும் வளர்ச்சி அடைந்தது.

கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் கூறும் நல்லுலகத்தோடு ஒப்புற இன்றைய தமிழகம் மாற வேண்டுமென என்றென்றும் அந்த எண்ணங்களைப் பிரதிபலிக்கும் புதிய சிந்தனைகளை—புதியவழிகளைக் காட்டிய அந்த பெருந்தகை இன்று எம்முடன் இல்லை. அவர் காட்டிய அந்த வழியை நாமும் பின்பற்றி புதிய சமுதாயத்தை உருவாக்குவோமாக!

அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் மனைவி, மக்கள் யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பு. சுந்தரம்பிள்ளை
தென்மராட்சி பிரதேச செயலரும், சாவகச்சேரி பிரதேச சபை விசேட ஆணையரும், தென்மராட்சி பிரதேச செயலக சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர்கள் சார்பாக.

## உயர்ந்து நிற்கும் மாமேதை

கல்வித் துறையை வளர்க்க என்றே தன் வாழ்வுக் காலத்தை அர்ப்பணித்து மக்கள் மத்தியிலும், கல்வியியலாளர் மத்தியிலும் உயர்ந்து நிற்கும் மாமேதை உலகம் புகழ் உத்தமர் பேராசிரியர் துரைராசா அவர்களை இன்று தமிழ் கூறும் நல்லுலகம் இழந்து ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது

பேராசிரியர் துரைராசா அவர்கள் தேசப்பற்று கொண்டவராக தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும் நேசித்ததோடு அவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் சமுதாய வளர்ச்சிக்காகவும் செயலாற்றியதோடு சமுதாய வளர்ச்சிக்காக உழைக்கும் நிறுவ அமைப்புக்களில் தன்னையும் ஈடுபடுத்தி அதில் முன்னின்று வழிநடத்தி வளர்ச்சி கண்டவர்;

தலைவர்,
தென்மராட்சிக் கூட்டுறவுக் கோட்டம்

## சிறந்த சமூக சேவையாளர்

தமிழ் மக்களின் மாணிக்கம் அணைந்தது. ''தங்கமான மனிதர்'' என்று எல்லோராலும் ஏகோபித்துப் புகழப்படும் பேராசிரியர் துரைராசாவின் இழப்பு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. அன்னாரின் தலைமையில் யாழ் வளாகம் புகழ்பெற்றது, பெருமையடைந்தது. சிறந்த சமூக சேவையில் புகழ் பெற்ற ''ஊற்று'' நிறுவனம் புகழ் பெற்றது

கல்விச் சமூகத்திற்குத் தன்னை அர்ப்பணித்து, வழி நடத்திய பெருந்தகை பேராசிரியர் துரைராசா அவர்களை நாம் என்றும் இதயத்தில் இருத்தி அஞ்சலி செலுத்துவோமாக,

தென்மராட்சி அதிபர்கள் சங்கம்.



## தமிழ்த் தாயின் தலைசிறந்தமகன் காலத்தின் தேவை உணர்ந்தவர்

பேராசிரியர் துரைராசா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுக் ஆறாத்துயரம் அடைகின்றோம்

அறிவுத் திறனும் ஆற்றலும் மிக்க அவர் எமது பிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்காக அயராது உழைத்தவர்.

தமிழ்த் தாயின் தலைசிறந்த மகனாக விளங்கி காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு கல்விப் பணியுடன் சமூகப் பணியும் ஆற்றி மக்களின் மனங்களில் மங்காத இடம் பெற்றவர்.

பூரணத்துவம் கொண்ட ஆளுமையுடைய மனிதரான அவரது மறைவு எமக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

திருமதி பி கணேசலிங்கம்
கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## உறுதி குலையாத சிந்தனையாளர்

கல்வித் தொண்டினைக் கண்ணாகக் கொண்டு செயல் திறனுடனும், துடிப்புடனும், செயற்பட்டு அறிவாற்றல் மிக்க அறிஞர்களை, நாட்டவர் போற்றும் நல்லவர்களை வையகம் புகழும் வல்லவர்களை மாநிலம் வாழ்த்தும் மாமேதைகளை, பல்துறை விற்பன்னர்களை, பண்பாளர்களை, சிந்தனைச் சிற்பிகளை சீர் திருத்தவாதிகளை, உருவாக்கிய பெருமை, புகழ் சிறப்பு, மறைந்த எமது புகழ் பூத்த துணைவேந்தர் அறிவியல் மேதை அ. துரைராசா அவர்களையே சாரும்.

இலட்சியப் பற்று, தேசப் பற்றும் கட்டுக் கோப்பும் மிக்க திடமான உறுதி, குலையாத, சிந்தனை சிதையாத, இளம் சமுதாயத்தை கட்டியெழுப்ப நல்வழி காட்டியாக கடமையுணர்வோடு செயற்பட்ட அந்த அறிவியல் மேதை துடிப்பின்றிய படகாக நடுக்கடலில் அவர்களைத் தத்தளிக்க விட்டுச் சென்றமை இளம் சமுதாயத்தின் துரதிஷ்டமே,

இலங்கை வங்கி,
மக்கள் வங்கி,
தேசிய சேமிப்பு வங்கி.
சாவகச்சேரி.

## இன, மொழிப்பற்றுடன் தன்னலமற்ற சேவை

பேராசிரியர் அமரர் அ. துரைராசா பெருந்தகை இன்று எம்மிடையே இல்லை! விடிவை ஆவலுடன் நேசித்து வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்திற்கு அவரது இழப்பு ஈடு செயற்பாலதன்று!

அவர் பிறந்த மண்ணின் வாசனையை மறவாதவராய்,—

அச் சூழலிலேயே வளைய வந்து மக்களோடு மக்களாய் அவர் தம் துன்பங்களில், வாழ்க்கை முறைகளில் பங்கு கொண்டு, இனப் பற்றும், மொழிப்பற்றும் தனதிரு கண்களைப்போல் கருதி தன்னலமற்ற சேவையை ஆற்றினர்.

இந்த மண்ணிலே தலைக்கொள்ளாமல் தேடி வந்த வசதிகளை எல்லாம் துச்சமென உதறி, முன் நிறைந்த பாதையிலே தாமும் நடந்து அப்பாதையையேமற்றவர் நிறைந்ததாக மாற்ற முயற்சித்து சேவையாற்றிய ஆம் மாமனிதர் இன்றில்லை.

அவர் இங்கு பதித்த முத்திரைகள், எமது சந்ததிக்கு ஒளியூட்டும், வழிகாட்டும், வளமூட்டும்என்ற நம்பிக்கையுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்துஎமது இதய அஞ்சலிகளை மனமாரச் செலுத்துவதுடன் அவரது குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளரும்,
உத்தியோகத்தர்களும்,
நகரசபை, சாவகச்சேரி.

## ஈடுசெய்ய முடியாத இழப்பு

முன்னாள் யாழ், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகை மாத்திரமன்றி சர்வதேச அறிஞர் உலகையே துன்பக்கடலில் ஆழ்த்தியுள்ளது.

இனம், மதம், மொழி, தேசம் என்ற வேறுபாடுகளைக் கடந்து நின்று பேராசிரியர் ஆற்றிய சேவைகள் பலவெனினும் எமது இனம், தேசம் என்ற எல்லைக்குள் நின்று தமிழ் மக்களின் விடிவுக்காகச் சேவையாற்றவும் மறக்கவில்லை.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களின் பேரன்புக்கும் அவர்களின் உயர்வளர்ச்சிக்கும் மாத்திரமன்றி பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் வழிகாட்டியவர் பேராசிரியர் அவர்கள்.

எமது கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக அணி செய்து பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை எம் நெஞ்சங்களை விட்டு அழியா வரம் பெற்றவை.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என தமது உயர்வுக்குரிய இரகசியங்களான ''முயற்சி, பொறுமை, நேர்மை'' என்ற முப்பெரும் மந்திரங்களை எமது மனங்களில் பதிய வைத்த ஞானதேவன்.

எளிமை வாழ்வும் காலத்தை வென்று நிற்கும் உயர் ஆளுமை விருத்தியும் கொண்ட யுகபுருஷரான பேராசிரியர் அவர்களின் மறைவு மாணவ சமுதாயத்துக்கு மட்டுமன்றி தமிழ் உலகுக்குமட்டுமன்றி முழு மனித சமுதாயத்துக்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி


தொகுப்பு. க. பாலகிருஷ்ணன்

# எம் இதய அஞ்சலி

## 'துறந்தார் பெருமை துணை கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'

இந்த மண்ணின் விடிவுக்காய் தன்னை அர்ப்பணித்தவரான முன்னாள் துணைவேந்தர் அ. துரைராசா அவர்களின் பிரிவு இந்த நாட்டை உலுக்கியுள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகளில் ஆழமாக ஈடுபட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். எம் போராட்ட வரலாற்றில் போராட்டத்துடன் இணையாமல் ஒதுங்கி பார்வையாளராக நின்றவர்களும் உண்டு. ஆனால் துணை வேந்தரோ போராட்ட நடவடிக்கைகளுக்கும் அதனோடு தொடர்பான பொருண்மிய வளர்ச்சிக்கும் பெரும் துணை நின்றதோடு பொருண்மிய பணிகளுக்கு யாழ் பல்கலைக்கழகத்தை பெருமளவிற்கு இணைத்தவர்.

இந்த மண் விடுதலை பெறும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்; என்ற காரணத்தால் இந்த மண்ணினதும், மக்களினதும் போராட்ட வாழ்வுடன் ஒன்றிணைந்து நின்றார். போராட்ட வாழ்வின் பழுவை சுமந்து கொண்டார். எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும் எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப் பற்றி நின்ற அவர் எமது தமிழீழ தேசியத் தலைவரினால் கௌரவிக்கப்பட்டார். பொருண்மிய வளர்ச்சிக்குத் தேவையான சகல துறைசார் நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்ள ஓர் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர் நோயுற்ற தனது இறுதிக் காலங்களில் கூட நாட்டின் பொருண்மிய மேம்பாட்டுக்காக சிந்தித்துக் கடுமையாக உழைத்த ஒரு பெருந்தகை ஆவார்.



முன்னைநாள் துணைவேந்தர்
## பேராசிரியர் அ. துரைராசா

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் சூடு; மீனவர் பலி!

குருநகர், ஜூன் 15

நேற்று முன்தினம் திங்கட் கிழமை இரவு பண்ணைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது மண்டைதீவு படையினர் சுட்டதில் ஒருவர் கழுத்தில் காயமடைந்து பலியானார்.

குருநகர், தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த இளம் மீனவரான குருகுலம் அன்ரனிதாஸ் (வயது 16) என்பவரே படையினரின் சூட்டுக்கு இலக்காகிப் பலியானவர் ஆவார்.

# எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பதில் இழுபறி

## குழம்பிய நிலையில் டி.பி.

கொழும்பு, ஜூன் 15

முதலில் எந்தத் தேர்தலை நடத்துவது? ஜனாதிபதித் தேர்தலையா அல்லது நாடாளுமன்றத் தேர்தலையா? என்ற இழுபறி நிலையில் ஜனாதிபதி விஜேதுங்கா இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்காளர்களை 'நாடி' பிடித்துப் பார்க்க முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் நல்லது என்று ஜனாதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தலில் வெற்றியீட்டினால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவது இலகுவாக இருக்கும் என்று ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

ஆனால் பொதுத் தேர்தல் முடிந்ததும், கட்சிக்குள் ஒரு பிரிவு ஜனாதிபதி விஜேதுங்காவை ஓரங்கட்ட ஆரம்பித்து விடும் என்றும் —

ஜனாதிபதித் தேர்தலில் புதிய எம்.பிக்கள் சிலர் 'கவனம்' வைத்து வேலை செய்ய மாட்டார்கள் என்றும் ஒருசாரார் கூறுகின்றனர்.

அப்படி ஒரு நிலை ஏற்படாது என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா கட்சித் தலைமைப் பீடத்துக்கு உறுதியளித்திருக்கிறார்.

எப்படியாயினும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது புத்திசாலித்தனமல்ல என்றும் —

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அடிப்படையாக வைத்து பொதுத் தேர்தலுக்கு வேட்பாளர்களை நியமிக்கக் கூடிய நிலை புதிய ஜனாதிபதிக்கு இருக்கும் என்றும் அவர்கள் காரணம் காட்டுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடந்தால், கட்சி உறுப்பினர்கள் மீதான 'பிடி'யை ஜனாதிபதி தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். (ஓ-ஈ)

## பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம்

# வேலைவாய்ப்பு வழங்க ரூ. 130 கோடி ஒதுக்கீடு

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் முதல் வேலை வழங்குவதற்கு 130 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது.

அரச, தனியார் நிறுவனங்கள் பல பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதற்கு முன் வந்திருப்பதாக கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-ஈ-6)


# சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கையில் மின் ஊழியர்

கொழும்பு, ஜூன் 15

இலங்கை மின்சார சபையைச் சேர்ந்தகுமார் 14 ஆயிரம் ஊழியர்கள் அடுத்த பதினாறு தினங்களுள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

மின்சார சபை ஊழியர் சங்கம் முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் குறித்து அரசு எதுவித நடவடிக்கையையும் எடுக்காததைக் கண்டித்து இச்சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் ஆரம்பிக்கப்படுவதாக தொழிற்சங்கத் தலைவர் நிஹால் விஜேசிங்கா தெரிவித்தார். (ஓ-ஈ-6)

# அவர் ஒரு பல்கலைக்கழகம்



## நிகரற்ற மாமனிதன்
## நின் மறைவால் வாடுகிறோம்

கற்பிக்கத் தேவையிலை கருணையுளங் கனிந்த மேதைப்
பொற்பாத நிழல்பட்டால் போதும் கல்விப்புனல்வாரும்
நற்றந்தை நயமாய் பேசும் நாவண்மை பெற்ற நல்லாசான்
உற்ற பெரும் ஞானி தன் உயர்வை எண்ணா இமயம்
கற்கநெறி போதுமோ காலம் முழுதும் கண்டறிய
விற்பன்னர் விழுமியங்கள் விதந்துரைக்க வேறோர்
கற்கோளம் உருவாக வேண்டும் கடமை, நேர்மை
கற்பதற்கே துணைவேந்தர் பல்கலைக் கழகமாமே!

## அமரர்
# அ. துரைராசாவுக்கு
## எமது கண்ணீர் அஞ்சலிகள்

- 'உதயன்' நிர்வாகத்தினரும் பணியாளர்களும் -

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் குலவீரசிங்கம்

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

சரவணாய் வடக்கைச் சேர்ந்த ச. குலவீரசிங்கம் 11-06-94 அன்று காலமாகிவிட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், நாகச்சந்திரன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி (பிரான்ஸ்) விஜயலஷ்மி (பிரான்ஸ்), இராசாலஷ்மி, ஜெயலஷ்மி, சாந்தலஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி நவரெட்ணம், திருமதி புஸ்பதேவி பத்மநாதன், திருமதி சரோஜினிதேவி அரியராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் [ஈமக்கிரியை]கள் இவரின் இல்லத்தில் இன்று (15-06-94) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் எங்வங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

வல்லியப்பர் வளவு,
சரணாய் வடக்கு,
கரவெட்டி.

(சி 8506)

திருமதி
## விக்ரோறியாபிள்ளை தொம்மைப்பிள்ளை

எழுவைதீவைச் சேர்ந்த திருமதி விக்ரோறியா பிள்ளை தொம்மைப்பிள்ளை 13-6-94 இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற தொம்மைப்பிள்ளையின் அன்பு மனைவியும், குருஸ், ஜெயரட்ணம், நவம், பொன்றோஸ், மணி, அருட் சகோதரி ஜடாதோமஸ் (திருச்சிலுவைக் கன்னியர் சபை), ஜெயமணி, காலஞ்சென்ற செல்வி ரோகினி ஆகியோரின் அருமைத் தாயாரும், செல்லக்கண்டு, யேசுராசா, இரத்தினசிங்கம் செல்வம், மலா, றீற்றா ஆகியோரின் அன்பு மாமியாரும்; செல்லம்மா, அந்தோனிப்பிள்ளை, செல்வநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15-6-94) புதன் கிழமை பி. ப. 3 மணியளவில் இரங்கற் திருப்பலிக்காக யாழ். மரியாள் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டு பின்னர் பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நவம்
(மகன்)

68, பழைய பூங்கா வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(31432)

## திருநாவுக்கரசு (ஜூனியர்) ரஞ்சன்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி இலப்பிரகாசம் வீதி, இல 125 ஐ வசிப்பிடமாகக் கொண்ட திருநாவுக்கரசு (ஜூனியர்) ரஞ்சன் ஜேர்மனியில் 9-6-94 அன்று காலமானார்.

இவர் திரு. சின்னையா காலஞ்சென்ற பூரணம் சின்னையா தம்பதிகளின் பேரனும், திரு. திருநாவுக்கரசு (ஜூனியர்) ராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி தர்மினி ஜெயக்குமார், சயந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பஞ்சாட்சரம் தம்பதிகள், கணேசரத்தினம் தம்பதிகள், பாலசிங்கம் (ஆனந்தன்), ஆகியோரின் மருமகனும், தில்லைநாதன் தம்பதிகள், துரைசிங்கம் தம்பதிகள், விவேகானந்தன் தம்பதிகள் ஆகியோரின் பெறாமகனும், சரவணபவானந்தன், ஜெயக்குமார், ராஜேந்திரம், சிவராசா (ஜேர்மனி) ஆகியோரின் பிரிய மைத்துனரும், செல்வன் கியாசவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15-6-94 இன்று பி. ப. 3 30 மணிக்கு ஜேர்மனியில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
காபறேற்றர் ஆனந்தன்
(மாமனார்)

குறிப்பு:- இன்று 125 இலப்பிரகாசம் வீதியில் உள்ள இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

(31431)

திருமதி
## சுந்தரலிங்கம் வசந்தகுமாரி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஸ்கந்தபுரம், தற்பொழுது யாழ்ப்பாணம் நல்லூர் 29/4 C மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் வசந்தகுமாரி 13-06-1994 அன்று காலமானார்:

இவர் நாகேந்திரம் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், குமாரசாமி - காலஞ்சென்ற காமாட்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற நாகேந்திரம் - இராசம்மா தம்பதிகளின் மருமகளும், அனுசா, சுபாஜினி (சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மாணவிகள்), மயூரன் (கனகரட்ணம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரட்ணசிங்கம் (கந்தசாமி) காலஞ்சென்ற பாலசிங்கம், சரஸ்வதி, ரட்ணசிங்கம் (கொழும்பு), நாகேஸ்வரி (கனடா), தனபாலசிங்கம் (சுவிஸ்), புஸ்பவதி (கனடா), சாந்தகுமார் (சுவிஸ்), மகேந்திரன் (சுவிஸ்), வனிதாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, மகாலட்சுமி, ராஜேஸ்வரி, கனகலிங்கம், தனபாலசிங்கம், சண்முகலிங்கம், மகாலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கனகசிங்கத்தின் மருமகளும், லெட்சுமி (மாவிட்டபுரம்), காலஞ்சென்ற சற்குணம் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
நா. சுந்தரலிங்கம்
(கணவர்)

29/4 C, மருதடி வீதி,
நல்லூர்.

(31433)

# கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் அன்றையதினம் மதியம் 12 மணியளவில் யாழ் பொது வைத்திய சாலைக்கு வருமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# எங்கள் இதய அஞ்சலி

சாமனிதர், முன்னாள் துணைவேந்தர்
அமரர்
## பேராசிரியர் அழகையா துரைராசா
அவர்களுக்கு


எமது இதய பூர்வமான
கண்ணீர் அஞ்சலிகள்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வங்கி ஊழியர்கள்,
யாழ் மாவட்டம்.

(31427)

# கண்ணீர் அஞ்சலி



தமிழ் அன்னைக்கு
புகழ்சேர்த்த நல்லறிஞனே!
உங்கள் இழப்பு
தமிழருக்கு பேரிழப்பு

தலைவனை இழந்து துடிக்கும்
குடும்பத்தினருக்கு எமது
## ஆழ்ந்த அனுதாபங்கள்

- யாழ்ப்பாண
றோட்டறிக் கழகம் -

யாழ். பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்
## பேராசிரியர் அ. துரைராசா
அவர்களுக்கு எமது
இதயம் வடிக்கும்
## இரத்தக் கண்ணீர் அஞ்சலி



"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது"

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(31426)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 293/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 15-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org